பாலபோதினி உபபாட புத்தகம் — X

# சகுந்தலை சரிதை

பண்டித வ. நடராஜன் அவர்கள்
எழுதியது

நான்காம் பதிப்பு

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்

# சகுந்தலை சரிதை

1952ஆம் ஆண்டு பெப்ருவரி மாதம் 29ஆந் திகதி வெளிவந்துள்ள இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் உதவி நன்கொடைபெறும் தன்மொழிப் பாடசாலைகளுக்கும், இருபாஷைப் பாடசாலைகளுக்கும், ஆங்கில பாடசாலைகளுக்குமான ஒழுங்குச் சட்டத்தின் 19 (*A*)-ம் பிரிவில் பிரசுரிக்கப்பட்டதற்கமைய இப்புத்தகம் ஒரு நூல்நிலையத்துக்குரிய புத்தகமாக உபயோகித்தற்கு வித்தியாதிபதி அவர்களால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

**ஜீவானந்த நாணயக்கார**
செயலாளர்
பாடநூற் பிரசுர ஆலோசனைச் சபை

கொழும்பு 2,
28-9-65

**சுன்னாகம் :**
**வட - இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகம்**
பதிப்புரிமை] 1966. [விலை ரூபா 1-25

| | | |
|---|---|---|
| முதலாம் பதிப்பு | | — 1956 |
| இரண்டாம் பதிப்பு (மறுபிரசுரம்) | | — 1958 |
| மூன்றும் பதிப்பு | ,, | — 1962 |
| நான்காம் பதிப்பு | ,, | — 1966 |

சுன்னுகம் :
திருமகள் அழுத்தகம்

[ உரிமை பதிப்பகத்தார்க்குரியது ]

# முகவுரை

**கா**ளிதாசர், வடமொழி மகாகவி. அவரது பருவ வருணனைகளும், காவிய நடையும் மிக உயர்தரமானவை யென்பது, அறிஞர்களது முடிபு. ஆங்கிலக் கவிவாணரராகிய 'சேக்ஸ்பிய' ரோடு காளிதாசரை ஒப்பிட்டு மகிழ்வர் அறிஞர். இத்தகைய பெரும் புகழைக் காளி தாசருக்கு ஏற்படுத்தியது சாகுந்தல நாடக மாகும்.

சாகுந்தலக் கதை மகா பாரதத்திலும் காணப்படுகிறது. ஆயின், காளிதாசரது கதைப் போக்கு, மிகப் பொருத்தமாயும், துருவாச முனிவரது சாப சம்பவத்தாற் கதாபாத்திரங் களின் தூய்மை குறைவுறுதும், 'குணமென்னுங் குன்றேறி நின்றார் வெகுளி கணமேயுங் காத்த லரிது' என்னுங் குறளின் பொருள் நன்கு புலப்படுவதாயுங் காணப்படுகிறது. ஆதலால் அதனைப் பின்பற்றி, இந்நூல் தயாரிக்கப்பட் டுள்ளது.

காளிதாசரது சாகுந்தல நாடகம் பல மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. தமிழிலும் பலர் மொழிபெயர்த்திருக்கிறார்கள். அவற்றுள் மறைமலையடிகளின் மொழி பெயர்ப்புப் புலவர் பலராலும் போற்றப்படு கிறது. முக்கியமாக அந்நூலையும், மற்றைய

மொழிபெயர்ப்பு நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு 'சகுந்தலை சரிதை' என்னும் இந் நூல், மேல்வகுப்பு மாணவர்களின் உபயோகத் துக்கேற்றவிதமாக ஆக்கப்பட்டுள்ளது. கதைப் போக்கும், வருணனைகளும் கூடியவரை முத னூலிற் கூறப்பட்டவாறே எழுதப்பட்டுள்ளன.

இந்நூலிற் சில பாடல்களுங் காணப்படு கின்றன. அவற்றுள், முதற் பாடல் கௌரவ திரு. சு. நடேசன் அவர்களாற் 'சகுந்தலை வெண்பா' என்னுந் தலையங்கத்திற் பாடப் பட்டு 'ஞாயிறு' இதழில் வெளிவந்த பாடல் களுள் ஒன்று (பக். 4). அது, இந்திரன் சே[illegible] விப்படி மேனகை தென்றற் பருவத்தைப் பெற்றுக் கௌசிகரின் தவத்தைக் கலைக்க முற்பட்ட சம்பவத்தைத் தெரிவிப்பது.

மற்றொரு தனிப்பாடல், பண்டிதர் ம. வே. மகாலிங்கசிவம் அவர்களாற் பாடப்பட்டது (பக். 53). கண்ணுவர் சகுந்தலையைக் கணவ னிடம் வழியனுப்புங்காற் கூறியதாய பாடல் அது.

இன்னொரு பாடல் மறைமலையடிகளாற் பாடப்பட்டது (பக். 76). அது சகுந்தலையைப் பிரிந்த துஷ்யந்தனின் மனத்துயரை நன்கு சித்திரிக்கிறது. இப் பாடலைப் பாடிய பெரியார்களுக் கெல்லாம் தமிழ்த்தாயின்

பேரால் வணக்கம் செலுத்தக் கடமைப்பட்டுள்ளோம்.

இந்நூலாக்கத்திற் றொடர்புற்று வேண்டிய திருத்தங்கள் செய்து உதவிய பண்டிதர் சி. கா. தம்பையா அவர்களுக்கும், இந்நூலை அழகுசெய்யும் 'பாயிர'த்தை மனமுவந்தளித்த பண்டிதமணி அவர்களுக்கும் நாம் மிகவும் கடப்பாடுடையோம்.

இனிய வருணனைகளும், அரிய கதைப் புனைவும் பொருந்திய இந் நூலை, இளஞ் சிறுர்களின் அறிவுப் பசிக்கு விருந்தாக்குவது நம் நோக்கம். இந் நோக்கம் நிறைவேற இறைவனருள் கிடைப்பதாக.

வணக்கம்.

வட-இலங்கைத் தமிழ்நூற் பதிப்பகத்தார்

சுன்னுகம்,
25-6-56.

திருநெல்வேலிச் சைவாசிரிய கலாசாலைத்
தலைமைத் தமிழ் விரிவுரையாளர்
**பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை**
அவர்கள் அளித்த

# பாயிரம்

"கவிதை என்னும் மனேகர விலாச கன்னிகை ..... காவியாலங்காரங்களில் வல்லானையே தனது மனசுக்கியைந்த கமநீய' வேஷ யௌவன காந்தன் என்றெண்ணி, அவனை ஆலிங்கனஞ் செய்து, எப்போதும் அவனேடு சுகம் அடைகின்ருள்" என்கின்றது வில்ஹறணீயம்.

வடமொழியிலே காளிதாச மகாகவி தன்னை ஆலிங்கனஞ் செய்து அவசமெய்திய இரசாலங்காரம் என்கின்ற மநோகர விலாச கன்னிகையை, முனி சிரேஷ்டரான கண்ணுவ ராசிரமத்திற் கருக்கொள்ள வைத்து, மல்லிகை முல்லைகளுக்கு மத்தியிலே, மான்கள், மயில்கள், குயில்கள் துணையாக, இளைய மந்தமாருதத்தால் உயிர்ப்பித்து, அப் பச்சிளங்கொடியைத் தீண்டியுந் தீண்டாமலே வளர்த்து, அதன் கைபுனைந்தியற்ருக் கவின்பெறு வனப்பு,

யௌவனம் முற்றி இனியதொரு மலரை முகிழ்த்து, இன்தேன் துளிக்குஞ் சமயத்திலே,

இரசிகர்கள் என்கின்ற மதுகரங்கள், தமது நாக்களை நீளத்தந்து, உயிரை உருக்குவதொரு மதுத்துளிக்கு, நீர் துளிக்கின்றதொரு செவ்வியிலே,

அவ் விரசிகர்களின் நாக்களைப் புலரச் செய்து, அவர்களின் இருதயங்களிலே கொடியதொரு பாலைவனம்பண்ணி, அந்த இளங்கொடியைக் கண்ணீராற்றிலே முழுக வைத்துச் சிறிதே காலங் கழிய,

எந்தக் கற்பகதருவை எது பற்றிப் படரற் பாலதோ, அதை அதன் பக்கலின் ஒரு தனி வல்லியாக்கி, அதன்பாலே நல்லதொரு நறுங் கனியையுங் குலுங்கச்செய்து,

கவித்துவ உலகம் கரங்கள் கூப்பிச் ‘சாகுந்தலம்’ என்று பெயரிட்டுப் பூசித்தும் வாசித்தும் இனிமை சொட்டும்படி,

**கவிதை**

ஆகிய, இளங்கொடிக்கு அமரத்துவம் அளித்திருக்கின்றான். இவ்வாற்றால், மகாகவி காளிதாசன், கவிச்சக்கரவர்த்தி யாயினான்.

மலை உச்சியில் வட்டமிட்டுச் சரிவுகளில் ஓடி, மனசுக்கு விருந்துசெய்து, பின் திடீரென்று அச்சந் தருவதொரு நீர்வீழ்ச்சியாய்க் கீழே குதித்துப், பிறகு நிலத்திற் படர்வதோர் ஆறு போன்று, ஓங்கி எழுந்துங் குதித்தும் ஒழுகி யுஞ் சுவைசொட்டி நடப்பது சாகுந்தலநாடகம்.

இத்துணைச் சிறந்த சாகுந்தல நாடகத் தின் இயற்கை நலங்களை இயன்ற அளவு படம் பிடித்துக் காட்டுதற்குச் 'சகுந்தலை சரிதை' என்கின்ற இவ் வசனநூல் முயற்சி செய்து வென்றி எய்தியிருக்கின்றது. இதில் வரும் இயற்கை வருணனைகளும், சம்பாஷணை களும் முதனூலின் இயல்பைக் கற்பனைசெய்து காணுதற்குக் கண்ணாடிபோன்று உதவுகின் றன. வசனம், தெளிவும் உரிய ஓசையும் உடைத்தாய் அமைந்திருக்கின்றது. தமிழ் மாணவர்களுக்கு இது ஒரு விருந்து.

சாகுந்தல நாடகத்திலே வருகின்ற பிரியம் வதையின் பகடியும், சகுந்தலை காதலை வெளிப் படுத்தும் முறையும், துஷ்யந்தனைச் சகுந்தலை கோபித்து வைவதும், சார்ங்கரவன் என்கின்ற கண்ணுவரின் சீடன் சகுந்தலையை நிந்திப்ப தும் சங்கத்துச் சான்றோர்களின் செய்யுள் களிற் பயின்றவர்களின் காதுகளைச் சற்றே உறுத்தக்கூடும். ஆசிரியர்கள் அப்படியான

சந்தர்ப்பங்களைச் சங்கத்துச் செய்யுள்களிலும் எடுத்துக்காட்டி, தராதரங்கண்டு எடையிட்டு இனித்தலாகிய 'திறன் ஆய்வு'களில் உயர் தர வகுப்பு மாணவர்களை வழிப்படுத்தலாம்.

இயற்கைக் கவியாய்ப் பிறப்பில் அமைந்தவரும், கற்பனை உலகிற் சஞ்சாரஞ் செய்பவருமான திரு. ம. வே. மகாலிங்கசிவத்தின் கவிதை ஒன்று, இச் சகுந்தலை சரிதையை அழகு செய்கின்றது. கண்ணுவர் சகுந்தலையைக் கணவன்பால் வழிப்படுத்தும்போது, வாழ்த்துகின்ற சந்தர்ப்பம் சாகுந்தலத்தில் இருதயம் போன்றது. கவிகளின் இதயங்களை அளந்து காட்டுதற்குரிய இடம் அந்த இடம். அப்படிப்பட்ட இடத்தில் மகாலிங்கசிவத்தின் கவி, சகுந்தலைக்கு 'அளபெடைபோல் நீண்டு தோன்றும்' வழியை, 'அறுதொடர்க்க ணுகரம்போ லுறுக தூரம்' என்று குறுகச் செய்ய முயலுகின்றது. அறுதொடர்க்க ணுகரம் — குற்றியலுகரம். இந்தக் குற்றியலுகரக் கற்பனை சொந்தக் கற்பனை. இது காளிதாச மகாகவியின் கற்பனைக்கு மகுடஞ் சூட்டுவதுபோல் அமைந்திருக்கிறது. இந்த அருமந்த கற்பனைப் பாடல், பலவேறு பாடபேதங்களுடன் மகாலிங்கத்தின் மாணவ பரம்பரையில் வழங்கிவருகின்றது.

அப்பாடலின் சுத்த பாடம் பின்வருமாறு:—

" மங்கையிவள் செலும்வழியில் நறுந்தருக்கள்
நிழல்செய்து மலிக மற்றும்
பொங்குமணல் தாமரையின் பொலந்தாது
போற்பொலிக புனித வாவி
யெங்குமலர்ந் திலங்கிடுக மந்தமா
ருதம்வீச இனிய தோகை
யுங்குயிலுந் துணையாக அறுதொடர்க்க
ணுகரம்போ லுறுக தூரம்.

**சி. கணபதிப்பிள்ளை**

திருநெல்வேலி
சைவ ஆசிரிய கலாசாலை

# பொருளடக்கம்


| | | பக்கம் |
|---|---|---|
| | முகவுரை ... ... | iii |
| | பாயிரம் ... ... | vi |
| 1. | சகுந்தலையின் பிறப்பு ... ... | 1 |
| 2. | கண்ணுவரார்சிரமத்திற் சகுந்தலை | 6 |
| 3. | துஷ்யந்தன் சகுந்தலையை அறிந்தமை ... ... | 10 |
| 4. | துஷ்யந்தன் சகுந்தலையிற் காதல் கொண்டமை ... | 15 |
| 5. | துஷ்யந்தன் சகுந்தலையின் பிறப்பை அறிதல் ... | 18 |
| 6. | துஷ்யந்தன் சகுந்தலையைப்பற்றி தன் பாங்கனிடங் கூறுதல் ... | 23 |
| 7. | துஷ்யந்தன் பாங்கனை அயோத்திக் கனுப்புதல் ... | 28 |
| 8. | துஷ்யந்தன் சகுந்தலையை மணந்தமை ... ... | 34 |
| 9. | துருவாசமுனிவரிட்ட சாபம் ... | 41 |
| 10. | சகுந்தலை அத்தினபுரிக்குப் புறப்பட ஆயத்தமாதல் ... | 46 |

| | | |
|---|---|---|
| | | பக்கம் |
| 11. | கண்ணுவர் சகுந்தலையை வழி அனுப்புதல் ... | 51 |
| 12. | சகுந்தலை துஷ்யந்தனைக் காணுதல் | 59 |
| 13. | அரச சபையிற் சகுந்தலை ... | 63 |
| 14. | துஷ்யந்தன் மோதிரம் பெற்றமை | 72 |
| 15. | துஷ்யந்தன் உற்ற துயரம் ... | 76 |
| 16. | துஷ்யந்தன் தேவருலகு சென்று மீளல் ... ... | 82 |
| 17. | துஷ்யந்தன் சருவதமனனைக் காணல் ... | 86 |
| 18. | துஷ்யந்தன் புதல்வனை அறிதல் | 91 |
| 19. | எல்லாம் நன்மையாதல் ... | 94 |

# சகுந்தலை சரிதை

## 1. சகுந்தலையின் பிறப்பு

**வி**சுவாமித்திர முனிவர் முதலில் அரசராக இருந்து, பின்பு தவஞ்செய்து முனிவரானவர். அவர் அரசராக இருந்தபோது அவருக்குக் **கௌசிகராசா** என்று பெயர்.

கௌசிகராசா ஒருமுறை தமது படைவீரர்களுடன் வேட்டையாடச் சென்றார். வழியிலே வசிட்டமுனிவரின் ஆசிரமத்தைக் கண்டு அங்கே சென்றார்.

வசிட்டர் முனி சிரேட்டர் ; சாந்தமே உருவானவர் ; தவத்தான் மிக்கவர் ; பல சித்துக்களை அடைந்தவர். அதனாற்றான் கௌசிகராசா வசிட்டரது ஆசிரமத்துக்குச் சென்று அவரை வணங்கினார். வசிட்டர் அரசனை ஆசீர்வதித்த பின் 'நீரும் உம்முடைய படையினரும் இன்று இங்கே விருந்துண்டு செல்லல் வேண்டும்' என்று தெரிவித்தார். கௌசிகர் அதைக் கேட்டு, 'காட்டிலே தவஞ் செய்து சருகு, கந்தம் முதலியவற்றை உண்ணும் முனிவராகிய வசிட்டரால் நமக்கும் நம் படைகளுக்கும் எப்படி உணவளிக்க முடியும்?'

என எண்ணி, வசிட்டமுனிவரிடம் தம்மெண்ணத்தை வெளிப்படையாகத் தெரிவித்தார்.

வசிட்டர் புன்னகை புரிந்து, சபலை என்னும் பெயருடைய தமது அழகிய பசுக்கன்றை அழைத்து, "குழந்தாய் சபலை, அரசனுக்கும், படைகளுக்கும் வேண்டிய போசனம் அளித்து உபசரி" என்று கூறினார்.

அப்பொழுது அங்கே ஓர் அற்புத நிகழ்ச்சி நடைபெற்றது! அரசனுக்கும் பரிவாரங்களுக்கும் போதியதான இனிய உணவுகள் உடனே அங்கே தோன்றிக் குவிந்து கிடந்தன. அவ்வுணவுகள் எல்லோருக்கும் பரிமாறப்பட்டன. அரசனும் பரிவாரங்களும் நன்கு உண்டு மகிழ்ச்சியடைந்தார்கள். இவற்றைப் பார்த்து அதிசயித்த கௌசிகராசாவுக்கு, அந்தப் பசுவின்மேல் ஆசையுண்டானது. அந்தப் பசுவை வசிட்டரிடமிருந்து பெற விரும்பி "மகரிஷியே, இந்தச் சபலையை எனக்குத் தரவேண்டும். இத்தகைய பொருள்கள் அரசர்களுக்கே ஏற்றன" என்று வேண்டினார்.

வசிட்டர் சிறிதுநேரம் சிந்தித்தார். பின்பு கௌசிகரை நேர்க்கி, "சபலை என்னை விட்டுப் பிரிய விரும்பாது; ஆகையால் அதைத் தர முடியாமைக்கு வருந்துகிறேன்" என்று கூறினார். கௌசிகர், அதனைத் தமக்குத் தருமாறு மீண்டும் வசிட்டரை இரந்து கேட்டார்.

வசிட்டர் மீண்டும் மறுக்கவே, சபலையின்மேற் கௌசிகர் கொண்ட ஆசை மேலும் அதிகரித்தது. வசிட்டருக்கு விரோதமாய்த் தான் சபலையைக் கைப்பற்றிக்கொண்டு போக விரும்பிய கௌசிக ராசா சபலையைப் பிடிக்குமாறு, தம் படையினருக்குக் கட்டளையிட்டார். கௌசிகரின் படையினர், சபலையைப் பிடிக்க முயற்சித்தனர். அப்பொழுது சபலை, வசிட்டரினருகிற் சென்று, கண்ணீர் சொரிந்து நின்றது. முனிவர் மனம் நைந்து, சபலையை நோக்கி, "குழந்தாய் சபலை, உன்னை வருத்தும் இவர்களை அழிக்கக்கூடிய ஒரு சேனையைப் பெற்றுக் கொள்வாய்" என்றார். உடனே, எண்ணற்ற போர்வீரர்கள் அப் பசுவினின்றுந் தோன்றிக் கௌசிகரின் போர்வீரர்களைக் கொன்றனர். அப்பொழுதுதான் கௌசிகருக்குத் தவத்தின் பெருமை புலனாயிற்று! வசிட்டர் தவத்தினாலடைந்துள்ள உயர்வைக் கண்டு தாமும் தவஞ் செய்து, வசிட்டர்போற் பிரமரிஷியாக வேண்டுமென்று எண்ணிக் கடுந் தவஞ் செய்யத் தொடங்கினார். தவஞ்செய்து விசுவாமித்திர முனிவரானார்.

கௌசிகர் கௌதமி யாற்றங் கரையில், புஷ்கர தீர்த்தத்திற் கடுந் தவஞ் செய்து கொண்டிருப்பதை அறிந்த இந்திரன், அவருடைய தவத்தைத் தடுக்க முயன்றான். மேனகை யென்னும் தேவ கன்னிகையை

அழைத்து, அவளைப் புஷ்கர தீர்த்தத்துக்குச் சென்று விசுவாமித்திரரின் தவத்தைக் கலைக்கு மாறு கூறினான்.

விசுவாமித்திரர் கோபித்துத் 'தன்னைச் சபித்துவிடுவாரே' என்று மேனகை பயந்தாள். அப்போது தேவர்கோனாகிய இந்திரன் "அஞ்சாதே; உன் அழகில் விசுவாமித்திரர் மயங்குவார்" என அவளைத் தேற்றினான்.

'தேவர்கோன் கூறுமித் தேறுதலைக் கேட்டநங்கை
ஆவி யழிந்தாலு மாற்றுவதுன் — சேவகமே
தேர்ந்தேற் குறுதுணையாத் தென்ற லெனுந்தேவை
ஈந்தருள்க வென்று ளிரந்து'.

— சகுந்தலை வெண்பா

மேனகையின் வேண்டுதலால், இள வேனிற் பருவந் தொடங்கிற்று. சூரியனது பொற்கிரணங்கள் குளிர்ச்சியடையும் மாலைக் காலமாயிற்று; முல்லையும், கோங்கும், குமுத மலரும் விரிந்தன. அந்திப் பிறை, வானை அழகுசெய்தது. அப்பொழுது மேனகை இனிய இசைப் பாட்டுடனும் அன்ன நடையுடனும் கௌதமி யாற்றங்கரைக்குச் சென்று, ஆங்குள்ள புஷ்கர தீர்த்தத்தில் நீராடினாள். அப்பொழுது விசுவாமித்திரர் அவளைக் கண்டு பழவினையால் உள்ளந் தடுமாறினார். மேனகையின் அழகில் மயங்கித் தன் தவத்தைவிட்டு அவள்மேற் காதலுற்று அவளை மணம்புரிந்து

அவளுடன் சிலகாலம் வாழ்ந்தார். பின்னர் தமது பிழையை உணர்ந்து மேனகையைத் துறந்து மறுபடியுந் தவத்தை மேற்கொண்டார்.

அவர்களுடைய மணவாழ்வின் பயனாக, விசுவாமித்திரருக்கு மேனகையிடம் ஓரழகிய பெண்குழந்தை பிறந்தது. அதனை அவள் விசுவாமித்திரரிடம் கொண்டு சென்றபோது அதனை அவர் பொருட்படுத்தாது கடுந் தவத்தை மேற்கொண்டிருந்தார். அதனால், மேனகை அக்குழந்தையை அவருக்குச் சிறிது தூரத்தில், ஒரு புல்லுப் படுக்கையில் வளர்த்தி விட்டுத் தேவலோகஞ் சென்றுவிட்டாள். காட்டிலே வளர்த்தப்பட்ட குழந்தையைச் சகுந் தாப் பறவைகள், தம் சிறகுகளை விரித்து நிழல் செய்து பாதுகாத்தன.

காசிப முனிவரின் வழித்தோன்றிய கண்ணுவர் என்னும் முனிவர், அவ் வாரணியத்தினூடே செல்ல நேரிட்டபோது, அக் குழந்தையைக் கண்டு தமது பன்னசாலைக்கு எடுத்துச் சென்றார். சகுந்தாப் பறவைகளாற் பாதுகாக்கப்பட்டமையால், சகுந்தலை எனப் பெயரிட்டுத் தமது ஆசிரமத்தில் அக் குழந்தையை வளர்த்துவந்தார்.

## 2. கண்ணுவராசிரமத்திற் சகுந்தலை

உலகப் பற்றுக்களைத் துறந்தவர்கள் தம் துறவொழுக்கத்தினை மேற்கொள்ள ஆரணியஞ் செல்வர். அங்கே தடி கம்புகளாற் கட்டி, இலை தழைகளால் வேய்ந்து, ஆக்கிய பன்னசாலையில் வாழ்வர்; மெய்ப்பொருளை உணர்தலாகிய தவமுயல்வர். அவர்கள் முனிவர்கள்.

முனிவர்கள் வசிக்கும் ஆசிரமப் பகுதிகளை, தவமியற்றும் புனித இடங்களென யாரும், இலகுவில் அறிந்துகொள்ளலாம். அங்கே இளங் கிளிகள் மரப் பொந்துகளில் வாசஞ் செய்யும். அவை வாசஞ் செய்யும் மரங்களின் கீழே காட்டுத் தானியங்கள் மரப் பொந்துகளிலிருந்து சிதறி, எங்கும் பரந்துகிடக்கும். வேறு சில இடங்களில் நெய்ப்பற்றுள்ள அழகிய கற்கள், ஒளியுள்ள அழகிய பழங்களைப்போல மின்னி மிளிரும். இளம் மான் கன்றுகள், அச்சமின்றிப் புற்கறித்துண்டு விளையாடாநிற்கும். நீராடிச் செல்லும் முனிவர்களது மரவுரியாடைகளின் ஓரங்களினின்றும் நீர் சொட்டிக் கொண்டிருக்கும். அந் நீர் சொட்டிய துளியின் அடையாளங்களால் நீர்நிலைகளுக்குச் செல்லும் வழிகள் வரிவரியாகக் காணப்படும். நெய்யைச் சொரிந்து முனிவர்கள் செய்யும் யாகப் புகையினால், மரங்களி லரும்பிய இளந் தளிர்கள் பல்வேறு நிறமுடையனவாகத்

தோற்றும். யாகத்துக்காகக் கொழுந்து அறுக்கப்பட்ட தருப்பைப் புல்லுள்ள நிலத்தில், கருப்பங்கொண்ட பெண் மான்கள் புற்கறித்து மெல்ல உலாவும்.

பன்னசாலைகளின் பக்கத்திலே இறைவனை அருச்சனை செய்தற்கு ஏற்றனவான பூக்களைக் கொடுக்குஞ் செடிகளும், கொடிகளும், மரங்களும் உண்டாக்கப்பட்டிருக்கும். பிறர்க்குத் தீங்கு செய்யாதனவாகிய மான் முதலிய பிராணிகளும், மயில் முதலிய அழகிய பறவைகளும் அங்கே வளரும்.

கண்ணுவரது பன்னசாலை, மாலினி யாற்றங் கரையில் அழகிதாய் விளங்கிற்று. கண்ணுவரே அவ் வாசிரம வாசிகளின் தலைவராவர். அவர் காசிப முனிவரின் கோத்திரத்தைச் சேர்ந்தவர். கண்ணுவ முனிவரது பன்னசாலையை யடுத்து வேறு பல பன்னசாலைகளும் இருந்தன. அங்கே பல முனிவர்களும், முனி பத்தினியரும் தவவொழுக்கத்தில் வாழ்ந்து வந்தனர். முனி புதல்வர்கள் பலர், கண்ணுவர் ஆசிரமத்திற் கல்வி பயின்று வந்தனர்.

கண்ணுவ ராசிரமத்தில் மூதாட்டியார் ஒருவர் இருந்தார். அவர் முனி புதல்வியரை நல்ல முறையிலே வளர்த்து வந்தார். **கௌதமி** என்பது அவரது பெயர். அவரை 'ஐயை' என ஆசிரம வாசிகள் அழைத்தனர்.

கண்ணுவ ராசிரமத்தில் வளர்ந்த சகுந்தலை, கன்னிப் பருவமடைந்து பேரழகு பெற்றிருந்தாள். பிரமன் 'ஓரழகிய சித்திரத்தைப் பெண் வடிவமாக எழுதி, அவ் வடிவத்தினுள்ளே உயிரை நுழைத்துவிட்டானோ? அன்றி, அழகிய உறுப்புக்களை மனத்தாலியைத்து, அவற்றை ஒருங்கு சேர்த்துச் சகுந்தலையாகப் படைத்தானோ? அன்றி, அழியாத நல்ல தவங்களெல்லாம் ஒருருவாய்த் திரண்டு, இவள் இவ்வுருப் பெற்றனளோ' எனக் கண்டோர் கூறுமாறு பேரழகு படைத்திருந்தாள்.

பேரழகாற் றுலங்கிய சகுந்தலை, ஆசிரமத்துக்குரிய மரவுரி யணிந்திருந்தமையால், நறுமணங் கமழும் புதிய மல்லிகைப்பூ, மணமில்லாத எருக்கஞ் செடிமேல் வீழ்ந்திருப்பது போலக் காணப்பட்டாளாயினும், அவள் மணக்கப்படாத மலரையும், நகத்தாற் கிள்ளப்படாத இளந் தளிரையும், ஊசியாற் றுளைக்கப்படாத நவமணியையும், எவராலுஞ் சுவைக்கப்படாத புதிய தேனையும் போன்று, ஆரணியத்தை அழகு செய்துகொண்டிருந்தாள்.

கண்ணுவரது ஆசிரமத்தில் இவ்வாறு வளர்ந்து வந்த சகுந்தலைக்கு, முனிபுதல்வியர்களான அனசூயை, பிரியம்வதை என்னும் உயிர்த் தோழியர் இருவர் இருந்தனர்.

சகுந்தலை தன் தோழியருடன் பயமறியாத இளம் மான்கன்றுபோல மகிழ்ச்சியுடன் வாழ்ந்துவந்தாள். ஆசிரமத்திலுள்ள இளஞ் செடிகளுக்குக் குடத்தில் நீர்மொண்டு ஊற்றி, உடன் பிறந்தாரைப்போல அன்பு பாராட்டி அவற்றை வளர்த்துவந்தாள். தாயை இழந்த மான் கன்றுக்குக் கை நிரம்ப நெல்லை ஊட்டி, தன் புத்திரியைப்போலக் காப்பாற்றினாள். மான் கன்றுக்குத் தருப்பைப் புல்லின் முனை குத்தியமையால் ஏற்பட்ட வாய்ப் புண்ணுக்கு, இங்குதி நெய்யைத் தடவி அப் புண்ணை ஆற்றினாள். ஆசிரமத்துக்கு வந்த விருந்தினர்க்குக் கால் கழுவ இனிய நீருதவி, பாலும் பழமுமீந்து உபசரித்தாள். இவ்வாறு சகுந்தலையுந் தோழியரும் இனிது வாழ்ந்து வந்தனர்.

## 3 துஷ்யந்தன் சகுந்தலையை அறிந்தமை

சந்திர வம்சத்திலே புரு என்னும் அரசன் சிறந்தவன்; அவன் மரபிலே துஷ்யந்தன் தோன்றினன். அவன் அத்தினபுரியிலிருந்து அரசு செய்தான்.

அத்தினபுரி என்பது இப்போதுள்ள 'டில்லி' நகருக்கு வடக்கேயுள்ள ஒரு பட்டணம். துஷ்யந்தனது ஆட்சிக்குட்பட்ட ஆரணியத்தின் ஒரு பகுதியிலேயே கண்ணுவர் முதலிய முனிவர்களது ஆசிரமங்களும் இருந்தன.

ஒருநாள் துஷ்யந்தன், தன் நண்பனை விதூஷகன், படைவீரர் முதலியோருடன் தன் தேரிலேறி வேட்டை விருப்புடன் காட்டுக்குச் சென்றான். பல இடங்களிலும் வேட்டையாடிய பின் கண்ணுவ ராசிரமத்தின் அயலிலுள்ள ஓரிடத்தில் ஒரு புள்ளிமானைக் கண்டான். உடனே அந்த மானைத் தொடருமாறு தன் தேர்ப்பாகனை ஏவித் தானும் தேரில் ஏறி, வில்லுங் கணையுங் கைக்கொண்டான்.

மான் மிக வேகமாக ஓடிற்று. அதனாலே துஷ்யந்தன் நெடுந் தொலைவில் இழுக்கப்பட்டுச் சென்றுவிட்டான். மான் இடையிடையே தன் கழுத்தை அழகாக வளைத்துத் திரும்பித்

திரும்பி, துஷ்யந்தனது தேரைப் பார்த்துப் பார்த்து ஓடிற்று. அம்பு, தன்மேல் வந்து விழுந்துவிடுமோ என்னும் அச்சத்தால், தன் கழுத்தைச் சுருக்கி உள்ளே இழுத்து, பின் தொடைகளைப் பரப்பிக்கொண்டு பாய்ந்தது. அதன் வாயினின்று பாதி கறிக்கப்பட்ட புல், வழியெங்கும் சிந்திக் கிடந்தது. அது இடையிடையே துள்ளுவதால், அது காற்றிற் பறப்பதுபோலக் காட்சி அளித்தது. சிறிது நேரத்தில் அந்த மான் துஷ்யந்தனது பார்வைக்கு அரியதாய்த் தொலைவிற் போய்விட்டது.

தேர்ப்பாகன் மானைத் தொடர்வதற்காகக் குதிரைகளை வேகமாகச் செலுத்தினான். குதிரைகள், சூரியனது தேரை இழுக்கும் குதிரைகள்போல, மானைத் தொடர்ந்து தம் முடம்பின் முற்பாகத்தை நீட்டி, வேகமாக ஓடின. இதனாலே தூரத்திலே மிகச் சிறிதாகத் தோன்றிய பொருள்கள், விரைவினால் உடனே அண்மையில் மிகப் பெரிதாகத் தோன்றின. தேரும் மானைக் கிட்டிவிட்டது. அரசன் அம்பைக் குறிவைத்து எய்யத் தொடங்கினான். அப்பொழுது, " ஓ அரசனே, நில்! நில்! அந்த மானை எய்யாதே; அது ஆசிரமத்துக்குரிய மான். ஆசிரமத்துக்குரிய மான் கொல்லப்படல் ஆகாது " என்னும் வார்த்தைகளைக் கேட்டுத் தேரை நிறுத்தி, அப்புறம் பார்த்தான். துறவி

ஒருவர், இரண்டு மாணவர்களோடு தன் கையை உயரத் தூக்கி "ஓ, அரசனே, இம் மான் கண்ணுவ முனிவரது ஆசிரமத்துக்குரியது; இது கொல்லப்படல் ஆகாது. இடியைப் போல் வலியுடைய நின் அம்புகள் எங்கே! இம் மானின் மெல்லிய உடல் எங்கே! உன் அம்புகள் துன்பமுற்றவர்களைக் காப்பதற்கே உதவ வேண்டும். குற்றமற்றோரை அழிக்க உதவக்கூடாது" என்று கூறினர்.

அரசன் தன் வில்லைக் கீழே வைத்து, துறவியரை வணங்கினான். அவர்கள் துஷ்யந்தனை ஆசீர்வதித்து, "நாங்கள் வேள்விக்கு விறகு தேடச்செல்கிறோம். அதோ மாலினி யாற்றங் கரையில் கண்ணுவரது ஆசிரம மிருக்கிறது. கண்ணுவர் தம் புதல்வியாகிய சகுந்தலையிடம் விருந்தோம்பும் பணியை ஒப் படைத்து விட்டுத் தாம் தீர்த்த யாத்திரை சென்றுள்ளார். நீர்விரும்பினால் அங்கே சென்று விருந்தாளியாகலாம்" என்று கூறினர்.

இவ்வாறு கூறிய துறவி, விடைபெற்றுச் செல்ல, துஷ்யந்தன் ஆசிரமத்தைக் காண விரும்பித் தேரிற் சென்று, முனிவர்கள் தவ மியற்று மிடத்தை யடைந்து, தேரினின்று இறங்கினான். தன் அலங்கார உடைகளைக் களைந்து, தன் சாதாரண உடை தரித்து,

வில்லையும் பாகன் கையிற் கொடுத்து, தான் ஆசிரம வாசிகளைக் கண்டு திரும்புவதற்குள் குதிரைகளைக் குளிப்பாட்டி ஆறச் செய்யுமாறு அவனிடங் கூறி, ஆசிரமத்துள் நுழைந்தான்.

துஷ்யந்தன் ஆசிரமத்துட்புகும் வாயிலை அறிந்து அதனுட் புகுந்தான். அப்பொழுது அவனது வலத்தோள் துடித்தது. 'எனது வலத் தோள் துடிப்பதற்குரிய பயனை நான் எங்கே அடையப்போகிறேன்!'* எனப் பலவாறு சிந்திக்கும்பொழுது, அவ்வாசிரமத்தின் தென்பாகத்தில் யாரோ உரையாடும் ஒலி கேட்டது. உடனே துஷ்யந்தன் ஒலிவந்த திசையை அவதானித்தான்.

துறவோர் குடிக்குரிய பெண்கள் மூவர், தங்கள் வலுவிற்கேற்ற குடங்களில் நீர் மொண்டு, இளஞ் செடிகளுக்குத் தண்ணீர்விட வருவதைத் துஷ்யந்தன் பார்த்தான். அவர்கள் அழகைக் கண்டு வியப்படைந்தான். முல்லைக் காட்டிலே துறவோர் குடியில் வாழும் மகளிர்க்குள்ள பேரழகு அரண்மனை உவளகத்தில் வதியும் அரசமகளிர் அழகினுஞ் சிறந்திருப்பதைத் தன் வாயாற் கூறி ஆச்சரியமடைந்தான். அவர்கள் அழகில் — முக்கிய

---

* ஆடவர்க்கு வலத்தோளும் மகளிர்க்கு இடத்தோளும் துடித்தல், பின்நிகழும் நன்மையை முன் உணர்த்தும் உற்பாதம்.

மாகச் சகுந்தலையி னழகில் — தன் மனத்தைப் பறிகொடுத்த துஷ்யந்தன், ஒரு செடி மறை வில் நின்று அவர்கள் வருகையை அவ தானித்தான்.

தண்ணீர் கொண்டுவந்த சகுந்தலை, ஓரிளஞ் செடிக்கு நீர் ஊற்றினாள். அவள் வளைந்துகொண்டு நீரூற்றுவதைக் கண்ட தோழியாகிய அனசூயை, அவளை நோக்கி "சகுந்தலா, நின் தந்தையாராகிய கண்ணுவர் உன்னைப்பார்க்கிலும், இவ் வாசிரமத்திலுள்ள இளஞ் செடிகளிடத்தில் மிக அன்புகொண் டிருக்கிறார்போலும்! ஏனென்றால், இவ் விளஞ் செடிகளுக்கு நீரூற்றுமாறு அவற்றிலும் மெல் லியளாகிய நின்னை, ஏவியுள்ளாரே!" என்று கூறினாள்.

"என் தந்தை ஏவியதால்மட்டும் நான் இவ்வாறு செய்யவில்லை; நான் இவ் இளஞ் செடிகளை என் சகோதரிகள் போல நேசிக்கி றேன்; அதனாலேதான் நான் இவைகளை இவ் வாறு வளர்க்கிறேன்" என்று சகுந்தலை பிரியம் வதைக்கு விடைகூறிக்கொண்டே நீரூற்றினாள்.

துஷ்யந்தன் அவ்வார்த்தைகளைக் கேட்டு இன்புற்றான். அவர்களது உரையாடலினால் அவ்வழகி, கண்ணுவரின் புதல்வியாகிய சகுந் தலை என்பதை அவன் அறிந்துகொண்டான்.

## 4. துஷ்யந்தன் சகுந்தலையிற் காதல் கொண்டமை

தென்றற்காற்று வீசிற்று. இளந் தேமா மரத்தி னிலைகள் தென்றலா லசைந்தன. அந்த அசைவைக் கண்ட சகுந்தலை 'அவைகள் என்னை யழைக்கின்றன போலும்; இதோ அவற்றின் பக்கத்திற் செல்கிறேன்' என்று கூறிக்கொண்டு தேமாமரத்தி னயலிற் சென்று நின்ருள். அதனைக்கண்டு மகிழ்ந்த பிரியம் வதை, அவளைச் சற்று நேரம் அவ்விடத்திலே அசையாமல் நிற்கும்படி கூறினுள். ஏனெனில்' சகுந்தலை தேமாமரத்தின் அயலில் நிற்றல், மாமரம் ஓரிளங் கொடியோடு பிணைந்து நிற் பது போலத் தோன்றிற்று.

சகுந்தலை அவ்விடத்தைவிட் டகன்று போய், தான் அன்பாய் வளர்த்த முல்லைக் கொடி, தன் பக்கத்தில் நின்ற ஒரு தேமாமரத் திற் ருவிச் சேர்ந்திருப்பதைப் பார்த்துக் கொண்டு நின்ருள். அப்பொழுது பிரியம்வதை அனசூயையை நோக்கி, " அனசூயா, அதோ பார்; தான் வளர்த்த முல்லைக்கொடி அதற் கிசைந்த மணுளனுக அத் தேமாமரத்தைப் பற்றி நிற்பதுபோல, தனக்கிசைந்த மணுளன் ஒருவன் கிடைப்பானுவென்று கருதியவளாய், என்தோழி அதனையே பார்த்து நிற்கிருள் "

என்று உரத்துக் கூறிப் புன்னகை புரிந்தாள். இதனால் நாணமடைந்த சகுந்தலை "போடி, போ, உனக்கு எப்பொழுதும் என்மேற் பகடி தான்" என்று கூறினாள்.

சகுந்தலையினதும் தோழியரினதும் உரையாடலை அவதானித்து நின்ற துஷ்யந்தன் 'சகுந்தலை துறவோர் புத்திரியா? இவள் அரசகுமாரிபோல இருக்கிறாளே! இவள் அரசகுமாரியாகவே இருக்கவேண்டும்; ஏனெனில் என் மனம் ஒருபொழுதும் தருமத்துக்கு விரோதமாகச் செல்லாது; என்மனம் இவள்மேற் காதலுறுகின்றமையால் இவள் அரசபுத்திரியாதல் வேண்டும்; அல்லது அரசர்களால் மணங்கொள்ளத்தக்க குடியிற் பிறந்தவளாதல் வேண்டும்; ஐயப்படுதற்கு ஏதுவான சந்தர்ப்பங்களில் நல்லோர் மனம் எப்பக்கம் சாருகின்றதோ அதுவே கொள்ளத்தக்கது' என்று தன்னுள்ளே தீர்மானஞ் செய்தான். ஆயினும் சகுந்தலையின் குலத்தை அறிய வேண்டுமென்னும் அவாவுடையவனா யிருந்தான். அப்பொழுது, சகுந்தலை நீரூற்றிய செடியிலிருந்த கருவண்டொன்று, நீரூற்றியமையாற் கலைக்கப்பட்டோ, அன்றி, மலர் சூடியிருந்த சகுந்தலையையும் ஒரு பூங்கொடியென நினைந்தோ, அவள் முகத்தை நோக்கிப் பறந்தது. அதனாற் கலக்கமடைந்த சகுந்தலை

'' எனக்கு உதவி செய்யுங்கள்; எனக்கு உதவி செய்யுங்கள் '' எனக் கூவினுள்.

சகுந்தலையின் சத்தத்தைக் கேட்ட தோழியரிருவரும் புன்னகை புரிந்து '' நின்னை எங்களாற் காப்பாற்ற முடியுமா? தவத்தோர் வாழிடங்களை இடையூறின்றிக் காப்பவர் அரசராகையால், இவ்வாரணியத்தைப் பாதுகாக்கும் அரசனுகிய துஷ்யந்தனைக் கூப்பிடு '' என்று குறும்பாகக் கூறினர். துஷ்யந்தன் தங்கள் அண்மையில் நின்றமையை அவர்கள் அறியாராகையால், அங்ஙனங் கூறினர்.

சகுந்தலையின் எழில்மிகு வதனத்தை வட்டமிட்டு, அக் கருவண்டு சுழன்றமையினுல், அவள் அச்சங்கொண்டு மேலும் மேலும் உதவி வேண்டிக் கூவினள். தன்னைத் தெரிவித்துக்கொள்வதற்கு அதுவே தக்க சமயம் என்பதை அறிந்த துஷ்யந்தன், விரைவாக அவர்களுக் கெதிரே '' பௌரவ மன்னன் ஆட்சிக்குட்பட்ட இப் புனித ஆசிரமத்திலே துறவியர் புதல்வியரை வருத்துபவன் யார்? '' என்று கூறிக்கொண்டு அங்கே சென்றுன். பெண்கள் மூவரும் அவனைப் பார்த்துத் திடுக்குற்றனர்.

## 5. துஷ்யந்தன் சகுந்தலையின் பிறப்பை அறிதல்

"ஐய, இங்கோர் ரபாயமுந் நேரிடவில்லை. என் அன்புக்குரிய தோழியை, வண்டொன்று வெருட்டியமையால் மருண்டாள்; அஃதன்றி வேறொன்றுமில்லை" என்று, அனசூயை அரசனுக்குத் தெரிவித்தாள். அப்பொழுது அரசன் சகுந்தலையை நோக்கி "உங்கள் தவவொழுக்கம் நன்கு நடைபெறுகின்றதா ?" என்று வினவ, சகுந்தலை நாணத்தாற் தலைகுனிந்து நின்ருள்.

சகுந்தலையின் தோழியர், துஷ்யந்தனை வரவேற்றுபசரிக்க விரும்பிச் சகுந்தலையை நோக்கி "நங் குடிலுக்குப் போய்ப் பழங்களும் பாலும் கொண்டுவருவோம். இங்குள்ள நீர், இவர் பாதங்களைக் கழுவ உதவும்" எனக் கூற, துஷ்யந்தன் அவர்களைத் தடுத்து, "உங்கள் உபசார வார்த்தைகளே எனக்கு இதமளித்தன" எனக் கூறினுன்.

துஷ்யந்தனும், அம்மகளிரும் ஆங்குள்ள மணன் மேட்டிற் சிறிதுநேரம் இளைப்பாறினர். அப்பொழுது துஷ்யந்தன், அவர்கள் நட்புரிமையைப் பெரிதும் பாராட்டிப் பேசினுன். அச்சமயத்துச் சகுந்தலையின் மனத்தில் ஒரு வித உணர்ச்சி ஏற்பட்டது. துறவாசிரமத்

துக்கு ஒவ்வாத முறையிற் றன்மனம் துஷ் யந்தனிடத்து நெகிழ்ந்தமையை அவள் உணர்ந்தாள்.

துஷ்யந்தனது இனிய வார்த்தைகளாற் கவரப்பட்ட அனசூயை, பிரியம்வதை என்போர், அவன் ஓர் உயர்குடிப் பிறந்த பெருமகனு யிருக்கவேண்டுமென அநுமானித்து, அவனை நோக்கி "ஐயா, எந்தநாட்டு மக்கள் இப்பொழுது தங்களைப் பிரிந்தமையால், ஏக்கம் அடைந்திருக்கிறுர்கள்? எந்த அரச குடும்பம் தங்களை அடைந்தமையால் மதிப் புடையதாக விளங்குகிறது! என்பதை அறியும் அவாவுடையேம்" என்று கூறினர்கள்.

அரசன் சிறிது நேரம் சிந்தித்தபின், தான் தவச்சடங்குகள் நடைபெறும் இடங்களைப் பாதுகாப்பதற்காகத், துஷ்யந்த மகாரார்சா வால், நியமிக்கப்பட்டவ னென்றும் அதனுற் றுன் துறவிய ராசிரமங்களைப் பார்த்துச் செல்ல அங்குவர நேரிட்டதென்றுங் கூறினுன்.

சகுந்தலையுந் துஷ்யந்தனும் ஒருவர்மே லொருவர் கா்தல் கொண்டமையைத் தோழியர் குறிப்பா லுணர்ந்தனர். அப்பொழுது துஷ்யந்தன் சகுந்தலையைப் பற்றித் தான் அறிய விரும்பியமையைத் தோழியருக்குத் தெரிவிக்குமுகமாய், "கண்ணுவர் பிரமசரிய வாழ்க்கை யுடையராகவும், உங்கள் தோழி

அவருக்குப் புதல்வியாவ தெங்ஙனம் என்பது எனக்குப் புலனாகவில்லையே; அதை அறியும் அவாவுடையேன்'' என்று கூறினான். சகுந்தலையின் வரலாற்றை அனசூயை அரசனுக்குக் கூறினாள். சகுந்தலையின் பிறப்பு வரலாற்றை அறிந்த அரசன், தன் காதல் தக்க இடத்திற் சென்றிருப்பதை யறிந்து மகிழ்ச்சியடைந்தான்.

மன்னன் உள்ளக் கிளர்ச்சியைக் குறிப்பாலுணர்ந்த தோழியர், சகுந்தலையைப் பற்றி அரசன் வினாவிய வினாக்களுக்கு அவளது விவாகம் பற்றிக் கண்ணுவர் கவலை கொண்டிருப்பதையுந் தெரிவித்தனர். இதனால் நாணமடைந்த சகுந்தலை அவ்விடத்தைவிட் டகலமுற்பட்டனள். அப்பொழுது பிரியம்வதை அவளைத் தடுத்து நிறுத்தி, அவள் தனக்காக இரண்டுமுறை மரங்களுக்குத் தண்ணீ ரூற்ற வேண்டிய கடன் இருப்பதைத் தெரிவித்தாள்.

"அவள் களைப்படைந்திருக்கிறாள்; அவளுக்காக உனது கடனை நான் நிறைவேற்றுகிறேன்'' என்று துஷ்யந்தன் பிரியம்வதைக்குக் கூறி நீரூற்றுவதற்காகத் தன் கணையாழியைக் கழற்றினான். அக் கணையாழியின் மேல் எழுதப்பட்டிருந்த 'துஷ்யந்தன்' என்னும் எழுத்துக்களைப் பார்த்துத் தோழியர் பிரமித்தனர். அதனைக் கண்ட துஷ்யந்தன், அக் கணை

யாழி துஷ்யந்தனுற் றனக்குப் பரிசாகக் கொடுக்கப்பட்டதாகக் கூறினுன். "அங்ஙன மாகில் அது தங்கள் விரலைவிட்டுப் பிரிதல் தகாது. தாங்கள் கூறிய நன்மொழிகளே சகுந் தலையின் கடனைத் தீர்த்துவிட்டன" எனத் தோழியர் அரசனுக்குத் தெரிவித்து, "உன் கடன் இப்பொழுது கழிந்தது; இனி, நீ விரும் பினுற் போகலாம்" எனச் சகுந்தலைக்கு விடை யீந்தார்கள்.

அச்சமயத்து, ஓர் யானையை யாரோ துரத்திவருஞ் சத்தங் கேட்டது. அதனைக் கேட்ட முனிவர்கள் பயந்து, தங்கள் ஆசிரமங் களை அழித்துவிடுமோ என எண்ணிக் கூக்குர லிட்டனர். அந்த யானை, ஒரு மரக்கிளையிலே தன் மருப்பு அழுந்தியமையால், அதனை முறித்து எடுத்துக் கொண்டும் மான் மந்தை களைத் துரத்திக்கொண்டும் கொடிகள் எல் லாம் உடலைச்சுற்ற அவற்றை இழுத்துக் கொண்டும் ஓடிவந்தது. அதனைக் கண்டு எல் லோருங் கலக்கமடைந்தனர்.

தன்னைத் தேடிவரும் தனது படைஞ ராலேயே, அது நிகழ்ந்ததென்பதை யுணர்ந்த துஷ்யந்தன், அத் துறவாசிரமத்துக்கு அழி வேற்படாவண்ணங் காப்பதற்குப் புறப்பட் டான். சகுந்தலை முதலிய மூவரும் ஆசிரமத் துக்குச் செல்ல விரும்பினர். அவர்களுக்கு அரசன் விடைகொடுத்து அனுப்பினுன்.

விருந்தினர்க்குச் செய்யவேண்டிய வழிபாடுகள் எதனையுந் தாங்கள் அவனுக்குச் செய்யாமையால், அவர்கள் மனம் நொந்து, மற்றுமொருமுறை அவனைத் தம் ஆசிரமத்துக்கு வரும்படி கேட்டுக்கொண்டனர். இனிய வார்த்தைகளினு லுபசரித்தமை தனக்கு மன மகிழ்ச்சியைத் தந்தது, என அரசன் தெரிவித்துச் சென்றான்.

சகுந்தலைமேற் கொண்ட விருப்பால் துஷ்யந்தனுக்குத் தன் நகருக்குத் திரும்பவேண்டுமென்ற விருப்பங் குறைந்துவிட்டது. துறவியராசிரமத்துக் கண்மையிலுள்ள ஓரிடத்தில், படை வீரரைக்கொண்டு கூடாரமடிப்பித்தான். அவன் மனம் அவன் உடலோ டிணங்கியிராமல், காற்றோட்டத்துக்கு எதிரே பிடித்த கொடி மரத்தின் பட்டாடை போலச் சகுந்தலைபால் இழுப்புண்டு சென்றது.

## 6. துஷ்யந்தன் சகுந்தலையைப்பற்றித் தன் பாங்கனிடங் கூறுதல்

**து**ஷ்யந்தனின் நண்பனுன மாடவியன் என்னும் விதூஷகன், நாள் பல கழிந்தமையின் வேட்டையாடலில் வெறுப்படைந்தான். அவன் அத்திணபுரி செல்ல விரும்பினுன். துஷ்யந்தனும் வேட்டையாடலில் வெறுப் புற்ருனயினும், சகுந்தலேமேற்கொண்ட காதல் காரணமாகத் தன் நகருக்கு உடனே திரும்பிச் செல்ல விரும்பவில்லே; பரிவாரங்களோ ''அதோ ஒரு மான்; இதோ புலி; அங்கே ஒரு பன்றி'' என்னுங் கூச்சலுடன் மரநிழலு மரிதான அக்கோடை காலத்தின் நடுப்பகலிலும் வேட்டை விரும்பி அலேந்துகொண்டிருந் தனர். இரும்புக் கம்பியிற் கோத்து, நெருப்பில் வாட்டப்பட்ட இறைச்சியை வேளே தப்பிய வேளேயிலும் உண்டனர். மரங்களினின்று உதிர்ந்து விழுந்த, இலேகளா லழுக்கடைந்த அருவி நீரை உண்டு காலங் கழித்தனர்.

சகுந்தலேமேற் கொண்ட காதல் நினேவால், துஷ்யந்தன் ஒருபுறம் மகிழ்ச்சியும், தன் காதல் கைகூடுமோ என்னும் எண்ணத்தால், ஒருபுறம் ஏக்கமும் கொண்டிருந்தான்.

தன் உடல் வருத்தத்தைப் பொறுக்க மாட்டாமையால் நகருக்குப் போக விரும்பிய விதூஷகன், தன் விருப்பத்தைத் தெரிவிக்க

அரசனிடஞ் சென்றான். அப்பொழுது அரசன் தன்னை நோக்கி வருவதைக் கண்டு, கால் முடமாய் நடக்க முடியாதவனைப்போலப் பாசாங்கு செய்து, ஒரு மரத்தைப் பற்றிக்கொண்டு அவ்விடத்திலேயே நின்றான். அரசன் தன்னைக் கிட்டியவுடன் "ஓ நண்பரே, என் கையுங் காலும் நீட்டமுடியாதனவா யிருக்கின்றன. ஆகவே, 'உமக்கு வெற்றி உண்டாவதாக' என வாயினால் மட்டும் வாழ்த்துகிறேன்" எனக் கூறி நின்றான்.

அரசன் புன்னகை செய்து "உன் உடம்புக்கு இந்தத் திமிர்வாதப் பிடிப்பு எங்கேயிருந்து வந்தது" என விதூஷகனை வினவ, அவன் "இதுகூடத் தங்களுக்குத் தெரியவில்லையா? கண்ணைக் குத்திவிட்டு, ஏன் கண்ணீர் வருகிறதென்று கேட்கிறீர்களே! ஒரு நாணற் புல்லு, நீரோட்டத்தின் வேகத்தினாலன்றித் தானாகவே வளைவதுண்டா? நீங்கள் உங்கள் அரசியற் கடமைகளை மறந்து, இந்த இருள் மிகுந்த காட்டிலே ஒரு வேடுவனைப் போல அலைந்துகொண்டிருக்கிறீர்களே! உங்களுடன் நானும் காட்டு விலங்குகளைப் பின் தொடர்ந்தோடியதால் மரங்களுடன் உரோஞ்சுண்ட என்னுறுப்புக்கள் நோவடைந்துள்ளன. ஆகையால், ஒருநாளைக்கேனும், நான் சற்று இளைப்பாற அநுமதி தரல் வேண்டும்" என்று கூறினான்.

துஷ்யந்தனும் வேட்டையாடலை விரும்பவில்லை. ஏனெனில், புள்ளிமான்களின் மருளும்

கண்கள் சகுந்தலையின் கண்களை அவனுக்கு ஞாபகமூட்டின. அதனல், அந்த மான்களைக் கொல்ல அவன் மனம் இசையவில்லை. இவ்வாறு வேட்டையாடலை விரும்பாதிருந்த துஷ்யந்தன், விதூஷகனின் வேண்டுகோளை மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டான். அதனுல், விதூஷகன் மனமகிழ்ந்து, இளைப்பாறுதற்கேற்ற ஒரு தனியிடம் நாடிப் புறப்பட்டான். அப்பொழுது துஷ்யந்தன் அவனைத் தடுத்து நிறுத்தி " சற்றே பொறு; நான் சொல்வதைக் கேட்டுச் செல். நீ, நன்கு இளைப்பாறியபின் உனக்கு வருத்தந் தராத ஒரு செயலில் நீ எனக்கு உதவிபுரியவேண்டும்" எனத் தெரிவித்தான்; " எனக்குக் கஷ்டமற்ற செயலா? அப்படியானல், அது என்ன; கொழுக்கட்டை தின்னும் தொழிலா? அதுதான் எனக்கு வருத்தந்தராத செயல்!" என விதூஷகன் கூற " நான் அதனைப் பின்னர்த் தெரிவிப்பேன்" என அரசன் கூறி, வாயிற் காவலனை விளித்து, தன் படைத்தலைவனை அழைத்து வருமாறு கூறினன். காவலன் சென்று, படைத்தலைவனை அழைத்துவந்தான்.

மலைகளிடையே திரியும் ஆண் யானை போல, அழகிய உரமேறிய உடலினையுடைய துஷ்யந்தன் முன்னே, படைத்தலைவன் வந்து வணங்கி, காட்டிலே விலங்குகள் வளைக்கப்பட்டிருக்கின்றன; இன்னும் ஏன் காலந் தாமதித்தல் வேண்டும்; உடனே புறப்படுங்கள்; வேட்டை மேற்கொள்ளலாம்" என்று கூறினன்.

"என் நண்பனான விதூஷகன் வேட்டை யாடலை விரும்பவில்லை; அன்றியும், துறவிய ராசிரமங்களி னயலில் நாம் கூடாரங்கள் அமைத்திருத்தலின், வேட்டையாடலை மேற் கொள்ளின் அது துறவிகளுக்குக் கஷ்டத் தைத் தரக்கூடும். அதனால், இன்றுமுதல் காட்டெருமைகள் தம் விருப்பப்படி நீர் நிலை களிற் புகுந்து நீரைக் கலக்கட்டும்; மான் மர நிழலிற் றங்கி அசைபோட்டு ஆறுதலடையட் டும்; காட்டுப் பன்றிகள் கோரைக் கிழங்குகளை அச்சமின்றிக் கிளறி உண்ணட்டும்; எம் முடைய வில்லும், நாண் தளர்த்தப்பட்டு, இளைப்பாறட்டும்" எனக் கட்டளையிட்டான். படைத்தலைவன் அக் கட்டளையை ஏற்று, அவ் விடம் விட்டகன்றான்.

துஷ்யந்தன் தன் அயலில் நின்ற அனை வருக்குந் தனித்தனி ஒவ்வோர் ஏவலிட்டு, அனைவரையும் அவ்விடத்திலிருந்து போகச் செய்த பின்பு, விதூஷகனுடன் ஒரு படர் கொடி நிழலிலுள்ள மணவிருக்கையை அடைந்தான். அங்கே அவ்விருவரும் ஓரிடத் தில் அமர்ந்தனர்.

துஷ்யந்தன் விதூஷகனுக்கு, தான் கண் ணுவ ராசிரமத்திற் சகுந்தலையைக் கண்ட மையையும், அவளிடந் தன் மனங் காதல் கொண்டமையையுங் கூறினான். அதனைக் கேட்ட விதூஷகன், "துறவி மகளை அரசர் மணம்புரியலாமா? அஃது அரசர்க்குப் பொருந் தாதே! அங்ஙனமாக அவளை நீங்கள்

விரும்புவதேன்? அவளை மறந்து விடுங்கள்'' எனத் தெரிவித்தான். அப்பொழுது அரசன் சகுந்தலையின் பிறப்பு வரலாற்றை விதூஷக னுக்கு ஆதியோ டந்தமாகக் கூறினான். அத ஞல் அவன் மனமகிழ்ந்து ''தங்களிடத்து இம் மாற்றத்தை ஏற்படுத்திய அக் கன்னிகை, மிக வுஞ் சிறந்தவளாகவே இருத்தல் வேண்டும். அவளைத் தாங்கள் மணம்புரிந்து மகிழுங்கள்'' எனக் கூறினான்.

''சகுந்தலையின் தந்தையாரான கண்ணு வர், இப்பொழுது இங்கில்லை, அன்றியும், அவள் தன் எண்ணப்படி எதுவுஞ் செய்ய முடியாதவளாயு மிருக்கிறாள். ஆகையால் மண நிகழ்வது சாத்தியமன்று. ஆயினும் அவ ளைக் காண்பதற்கு என் மனம் விழைகிறது. எவ் விதம் அவளைக் காணலாம். எக்காரணத்தை முன்னிட்டு மறுபடியும் அவளிருப்பிடத்தை யடையலாம். இதற்கு நீ ஓர் உபாயங் கூறு'' என, அரசன் விதூஷகனை வினவ, அவன் ''தாங்கள் அரசர்; அரசர்க்குக் குடிகள் ஆறி லொரு கூறு கொடுக்கவேண்டியது கடமை. ஆகையால், ஆரணிய வாசிகளான துறவிகள், காட்டுத் தானியத்திலே தாங்கொடுக்கவேண் டிய ஆறிலொரு பகுதியைக் கொடுக்கவேண்டு மெனச் சென்று அவளைத் தரிசிக்கலாமே!'' என்று கூறினான். இச்சமையத்துத் துறவிய ரிருவர் அரச கூடாரத்தை நாடி வருவதைக் கண்டு, அரசனும் விதூஷகனும் அவ்விடத்தி னீங்கிக் கூடாரத்தை யடைந்தனர்.

## 7. துஷ்யந்தன் பரதனை அயோத்திக்கனுப்புதல்

துஷ்யந்தன் தன்னிருக்கையை அடைந்தவுடன், வாயில் காப்போன் அவ்விடம் வந்து அவனை வணங்கி, "அரசே, வாயிலில் முனி புதல்வரிருவர் தங்களைத் தரிசிக்கும் பொருட்டு வந்திருக்கின்றனர்" எனத் தெரிவிக்க, அவர்களை யழைத்து வருமாறு துஷ்யந்தன் பணித்தான். வாயில் காப்போன் விரைந்து சென்று, முனிபுதல்வர்களை அழைத்துக்கொண்டு அங்கே வந்தான்.

முனிவர்கள் வசிக்கும் ஆசிரமங்களினயலிலே, துஷ்யந்தன் சிலகாலம் வசித்தமையால், அரசரிடத்து இயற்கையாயமைந்துள்ள அச்சத் தோற்றம் அவனிடத்து அப்பொழுது காணப்படவில்லை. ஆனால், அரச ஒளியுடன் சாந்த சொரூபமும் அமைந்து பொலிவுடன் காணப்பட்டான். முனிவர் ஒருவருக்கும், அவனுக்கும் வேறுபாடு அதிகங்காணப்படவில்லை.

துறவிகள் தம்மிடம் வருவோரை மகிழ்ச்சியுடன் இன்முகங் காட்டி வரவேற்று அவர் வேண்டுகோளை நிறைவேற்றி வருவதுபோல துஷ்யந்தனுஞ் செய்து வந்தான். துறவிகள் தவ ஒழுக்கத்தின் வலியால் உலகைப் பாது காத்துப் பெரும் புண்ணியத்தைத் தேடிக்

கொண்டமைபோல, இவனும் உலகைப் பாது காத்தலாற் பெரும் புண்ணியத்தை அடைந் திருந்தான்.

கூடாரத்தை அடைந்த முனி புதல்வர்கள், இந்திரனைப் போலத் தோற்றம் அளித்த துஷ் யந்தனைப் பார்த்து, 'தேவர்களுக்கு உதவி யாய், அரக்கரை அழிக்கும் ஆற்றல் இவ னுக்கு உண்மையில் உண்டு' என மனத்துள் நினைந்து, "ஓ, அரசே, உமக்கு வெற்றியுண் டாவதாக" என வாழ்த்தினர். அப்பொழுது அரசன் தன் இருக்கையினின்றும் எழுந்து, அவர்களை வணங்கினன். முனிபுதல்வர்கள் துஷ்யந்தனை அடைந்து தாங்கள் கொண்டு வந்த இனிய பழங்களைக் கையுறையாகக் கொடுத்தனர். அரசன் அவற்றை மகிழ்ச்சி யோடேற்று, "தங்கள் கட்டளை எதுவோ, நான் அதனைச் செய்யச் சித்தமாயிருக்கிறேன்" என்றான்.

ஆசிரமத்திலுள்ள முனிவர்கள், தேவர் களைப் பிரீதிப்படுத்துதற்காக, ஒரு வேள்வி செய்ய எண்ணினர். கண்ணுவரங்கில்லாமை யால் அவ் வேள்வியை அரக்கர்கள் அழித்து விடுவரோ என, அவர்கள் அஞ்சினர்கள். ஆனல், துஷ்யந்தன் அப்பொழுது தம்மயலி லிருப்பதை யறிந்து அவனுதவியுடன் வேள் வியை இனிது நிறைவேற்றலாமென

நினைந்தே அம் முனிபுதல்வர்களை அவனிடம் அனுப்பினார்கள்.

முனி புதல்வர்கள் தாம் வந்த காரணத்தைத் தெரிவித்து, வேள்வியை இனிது நிறைவேற்ற, ஆசிரமத்திற் சில இரவுகள் தங்கி உதவிபுரியுமாறு துஷ்யந்தனை வேண்டினர். துஷ்யந்தன் அதற்குச் சம்மதித்து வில்லுங் கணையுமேந்திப் புறப்பட ஆயத்தஞ் செய்தான். விதூஷகன் " தாங்கள் தேடிய பூண்டு காலில் அகப்பட்டது " என்று மறைவாய் அரசனிடத்திற் புன்சிரிப்புடன் கூறினான்.

துஷ்யந்தன் தங்கள் வேண்டுகோளுக்கிணைந்தமையைக் கண்ட முனி புதல்வர்கள் மகிழ்ச்சியுடன், " இடர் உற்றவர்களுக்கு உதவிபுரிவதற் கென்றே புருவின் குடியிற் பிறந்தோர் தம்மை அருப்பணித்துள்ளார்கள் " என்று கூறித் தம் இருக்கை மீண்டனர்.

தன் நண்பனான விதூஷகனையும், முனிவர்களது ஆசிரமத்துக்குத் தன்னுடன் வருமாறு துஷ்யந்தன் கூறினான். சகுந்தலையைக் காணவேண்டு மென்னுமவா, விதூஷகனுக்கிருந்தாலும், வேள்வியை யழிக்கவரும் அரக்கர்கள், தன்னையுங் கொல்வர் எனக் கூறி, அவன் துஷ்யந்தனுடன் செல்ல மறுத்தான்.

" நீ என் அருகிலேயே யிருக்கலாம். நான் உன்னைப் பாதுகாப்பேன்; நீ பயப்படவேண்

டாம்'' எனக் கூறித் துஷ்யந்தன் விதூஷகனைத் தேற்றினான். அச் சமயத்தில், வாயில் காப்போன் ஆங்குப் புகுந்து, துஷ்யந்தனின் அன்னையாரா லனுப்பப்பெற்ற தூதுவன் ஒருவன் துஷ்யந்தனுக்கு ஏதோ செய்தி கொண்டு வந்திருப்பதாகக் கூறினான். அரசன் தூதுவனை அழைத்து வருமாறு கூறியவுடன் வாயிற் காவலன் அவனை யழைத்துவந்தான்.

கரபகன் என்னும் அத்தூதன், துஷ்யந்தன் முன்னிலையை யடைந்து ''மன்னர்மன்ன, நுமக்கு வெற்றி சிறப்பதாக! இன்றிலிருந்து நான்காந்நாள் தங்கள் அன்னையாரின் நோன்பு முடிவுறும். அன்று தாங்கள் தவறாமல் தன்னுடன் வந்திருக்க வேண்டுமென்பது தங்கள் அன்னையாரின் செய்தியாகும்'' என்று கூறி வணங்கி நின்றான்.

துஷ்யந்தனுக்கு ஒரு புறத்திலே துறவிகளின் வேள்வியைக் காக்கவேண்டிய கடமையிருந்தது; மற்றொருபுறத்திலே, தன் அன்னையாரின் கட்டளையை நிறைவேற்றவேண்டிய கடமை இருந்தது. இரண்டிலும் வழுவுதலாகாது. ஆகவே, என்ன செய்வதென்று சிந்தித்தான். ''யாது செய்யத்தக்கது'' என விதூஷகனை வினவினான். ''திரிசங்குபோல அங்குமின்றி இங்குமின்றி இடையே தொங்கிக்கொண்டிருக்கலாமே'' என்று விகடமாகப் பதிலளித்தான் விதூஷகன்.

இரண்டு கடமைகளுஞ் செய்யப்பட வேண்டியனவாதலின், துஷ்யந்தனின் மனம் கற்பாறையாற் பிரிக்கப்பட்ட நீரோட்டம்போல, இரண்டு பிளவாய்ப் பிரிவுண்டது. சிறிது நேரஞ் சிந்தித்தான். அவனுக்கு ஓர் யோசனை புலப்பட்டது. உடனே விதூஷகனை நோக்கி, "நண்பா, நீ என் அன்னையாரால், அவர் புதல்வன் போலக் கருதப்படுகிறாய்; ஆகையால், நீ சென்று, அன்னையின் விருந்திற் பங்குபற்று. துறவிகளுக்குச் செய்யவேண்டிய கடமையிலே, என் உள்ளம் ஈடுபட்டிருப்பதாகச் சொல்லு. நீயே, நான் செய்யவேண்டிய அனைத்தையும் ஆங்குச் செய்" என்று கூறினான்.

விதூஷகன் சம்மதித்தான். துஷ்யந்தன் தன் படைவீரர்களையுந் தன் நகருக்கு அனுப்ப எண்ணியிருப்பதை யறிந்த விதூஷகன், தன்னை ஓரிளவரசனாக எண்ணி மகிழ்ச்சியடைந்து, அதனைத் துஷ்யந்தனுக்குப் பெருமையுடன் கூறினான். அதனைக் கேட்ட துஷ்யந்தன் விதூஷகனின் பேதைமையை நினைந்து, புன்னகைபுரிந்தான். ஒருபோது, தான் சகுந்தலைமேற் காதலுற்றிருப்பதை, விதூஷகன் தன் தாயாரிடத்திலும் உவளகத்து மகளிரிடத்திலுங் கூறக்கூடுமென நினைந்து, விதூஷகனின் கையைப் பிடித்து அழைத்து, "இளவரசரே, முனிவரிடங்

கொண்ட பெரும் பயபக்தியால், நான் முனிவர்களது யாகத்தைக் கர்ப்பாற்ற ஆசிரமத்துக்குச் செல்கிறேன். உண்மையில், எனக்கு அத்துறவி மகளிடத்தில் எவ்வித விருப்பமுமில்லை. என்னுடைய அந்தஸ்து எங்கே! காட்டில் வாழும் அப்பெண்ணின் அந்தஸ்து எங்கே! அன்ப, நான் பகடியாகக் கூறியவற்றை, நீ உண்மையென நம்பாதே'' எனக் கூறி, எல்லாரையும் வழி யனுப்பிவிட்டு, துறவியராசிரமம் நோக்கிச் சென்றான்.

## 8. துஷ்யந்தன் சகுந்தலையை மணந்தமை

மாட்சிமை தங்கிய துஷ்யந்த மன்னனின் பாதுகாப்பிலே, துறவிய ராசிரமத்தில் வேள்விகளனைத்தும் இனிது நடைபெறலாயின. துஷ்யந்தனது விண்ணாணிஞேசையைக் கேட்ட அளவிலேயே, வேள்வியை நோக்கிவந்த இடையூறுகளனைத்தும் நீங்கிவிட்டன. இவ்வாறு வேள்விச் சடங்குகள் இனிது முடிந்து, வேள்வி மேடைகள் யாவுந் தந்தொழி லொழிந்தன. வேள்வியாசிரியர், தம் வேள்வி இனிது நிறைவேறினமையால், மனமகிழ்ச்சியுடன் துஷ்யந்தனுக்கு நன்றி தெரிவித்தார். வேள்வியாசிரியரின் மாணுக்கர்கள், துஷ்யந்தன் வேள்வி காத்த சிறப்பைப் பாராட்டினர். அனைவருந் துஷ்யந்தனைக் கௌரவித்து, அவனுக்குப் பிரியாவிடை கூறினர்.

துஷ்யந்தன், உழைப்பினுற் களைப்படைந்திருந்தான். அவனுக்கு, ஆறுதல் வேண்டியிருந்தது. சகுந்தலையைக் காண்பதால் அவனது உடலும் மனமும் ஆறுதலடையக்கூடும். அவ் வெண்ணம் துஷ்யந்தனைத் தூண்ட, அவன் சகுந்தலையைக் காண வேண்டுமென விரும்பினுன். அப்பொழுது வெம்மை மிகுந்த நடுப்பகல் நேரமாயிருந்தது.

வெம்மை மிகுந்த நடுப்பகல் நேரத்தை, சகுந்தலை தன் தோழிமாரோடு, பசுமை வாய்ந்த இளங்கொடிக ளிணைந்துள்ள பந்த ரால் மூடப்பெற்ற மாலினி யாற்றங் கரையிற் கழிப்பது வழக்கம். ஆகவே, துஷ்யந்தன் அவ்விடத்தை நோக்கிச் சென்றான். அங்கே இனிய தென்றல் வீசிற்று. அது, உடலுக் கின்பத்தையும் ஆறுதலையும் அளித்து, இனிமை செய்தது. அவன் சகுந்தலையைக் காணத்தக்கதான ஒரு மறைவான இடத்திலே தங்கி நின்றான்.

சகுந்தலை துஷ்யந்தன்மேற் கொண்ட காத லால், மனத்தில் ஒருவித பேதலிப்பும் உடல் வருத்தமு முற்றிருந்தாள். அவள் வருத்தத் தின் காரணத்தை நன்கு அறிந்துகொள்ளாத தோழியர், அவள் வருத்தத்துக்கு வெப்பமே காரணமென எண்ணினர். தாமரைக் கிழங்குக ளுடன் கூடிய தாமரையிலைகளையும் நரந்தம் புல்லின் நெய்யினையும் பிரியம்வதை கொண்டு வந்தாள். வேள்விபுரியும் மாணக்கன், பிரியம் வதை மூலம் சகுந்தலையின் நோயை அறிந் தான். கண்ணுவ முனிவரின் உயிரை ஒத்த சகுந்தலைக்கு வெப்பத்தா லேற்பட்ட நோயைத் தீர்ப்பதற்காக, வேள்விச்சாலையின் இனிய தூய நீரைக் கௌதமியம்மையார் கையிற் கொடுத்தான்.

பிரப்பங் கொடியால் வளைக்கப்பட்ட இளங்கொடிப் பந்தரிலே, மலர்ப் படுக்கையிற் சகுந்தலை தங்கியிருந்தாள். தோழியரிருவரும் தாமரையிலைகளால் வீசி, இனிய காற்றை உண்டாக்கினர்கள். இவற்றாற் சிறிது சுகம் பெற்ற சகுந்தலை, தன் காதல் நினைவாற் பல வாறு தனக்குத்தானே கூறி, தன்னை மறந் திருந்தாள். இதனாற் கலக்கமடைந்த தோழி யர், ஒருவரையொருவர் பார்த்து விழித்தனர். இவையனைத்தையும் அவதானித்து நின்ற துஷ்யந்தன், சகுந்தலையின் நோய், தன்மேற் கொண்ட காதலாலேற்பட்டதென உணர்ந்து கொண்டான். அதனைத் தோழியரு மறிந்து கொண்டன ரென்பதை, அவர்களின் முகக்குறி காட்டின. அதனை அவர்கள் சகுந்தலையிடம் வினவி உண்மையை அறிந்துகொண்டனர். துஷ்யந்தனும் அவர்கள் சம்பாஷணையை அவ தானித்து, தன்மேற் சகுந்தலை காதல்கொண் டிருப்பதை, அவள் வாயால் அறிந்தமை யால், அளவற்ற மகிழ்ச்சிகொண்டான்.

சகுந்தலையிடத்து, துஷ்யந்தன் காட்டிய அன்பான பார்வையும் அவன் தேக மெலிவும் அவனுஞ் சகுந்தலையிடத்துக் காதல்கொண் டுள்ளா னென்பதைப் புலப்படுத்தின. இதனைப் பிரியம்வதையும், அனசூயையும் ஒருவாறு அறிந்திருந்தனர். ஆதலால், சகுந்தலை அரச னுக்குத் தன் காதலைத் தெரிவித்து ஒரு கடிதம்

எழுதினால், அதனைத் தான் மலர்களுடன் கொண்டு சென்று கடவுளுக்குப் பூசை செய்து துஷ்யந்தன் கையிற் கொடுப்பதாகப் பிரியம் வதை கூறினாள். கடவுளுக்குப் பூசை செய்த பூக்களையும் பிரசாதங்களையும் விருந்தினர்க்கும் பெரியோர்க்குங் கொடுப்பது மரபு. ஆதலாற் பிரியம்வதை அவ்வாறு கூறினாள்.

சகுந்தலையுந் துஷ்யந்தனுக்குக் கடிதம் எழுத விரும்பினாளாயினும், ஒருபோது அரசன் தன்மேற் காதல் கொண்டிலனாயின் யாதாகுமோ வென, ஐயுறவு கொண்டாள். அதனையுணர்ந்த தோழியர் அவளைத் தேற்றி அரசனும் அவள்மேற் காதலுற்றமையைத் தாமறிந்து கொண்டமைக் கேற்ப அவளுக்குப் புலப்படுத்தினர். அவளுந் தன் மனத்தைத் தேற்றி, துஷ்யந்தனுக்கு ஒரு கடிதம் எழுத ஆரம்பித்தாள்.

கிளிப்பிள்ளையின் மார்புப் பகுதியைப் போல, அழகிய தோற்றங்கொண்ட ஒரு தாமரையிலையின்மீது, தன் நகங்களாற் றன் காதலைப் புலப்படுத்தித் துஷ்யந்தனுக்குச் சகுந்தலை ஒரு கடிதம் வரைந்தாள். அதனைத் தன் தோழியரான பிரியம்வதைக்கும், அன சூயைக்கும் வாசித்துக் காட்டினாள். அது அரச னுக்குக் கேட்டது. உடனே, அரசன் மறை விடத்தினின்றும் வெளிப்பட்டு வந்து, சகுந் தலையைக் கிட்டி, அவளிடந் தானுங் காத

லுற்றிருப்பதைத் தெரிவித்தான். அரசனைக் கண்டதுந் தோழியர் மகிழ்ச்சிகொண்டு நல் வரவு கூறி, அவனை வரவேற்றனர். சகுந்தலை யும் மலர்ப் பாயலினின் றெழுந்து அவனை வர வேற்க விரும்பினாள். அரசன் அவளைத் தடுத்து, அவளருகிலே ஒரு பக்கத்தில் அமர்ந் தான். அப்பொழுது சகுந்தலை எழுந்து நின் ருள். பிரியம்வதையும் அனசூயையும் அவ் விடம் விட்டகன்றனர்.

துஷ்யந்தன், தான் அவள்மேற் காத லுற்றிருப்பதைச் சகுந்தலைக்குக் கூறி, தான் அவளை மணம்புரிந்து தன் பட்டத்து இராணி யாக்க விரும்புவதாகத் தெரிவித்தான். சகுந் தலையும் அதனை விரும்பினாளாயினும், கண் ணுவர் அப்போது ஆங்கு இல்லாமையால், தான் றன் விருப்பப்படி யெதுவுஞ் செய்ய முடியாதிருப்பதை அரசனிடந் தெரிவித்தாள். அரசன் அவளைத் தேற்றி அரச மகளிர் காந் தர்வ முறைப்படி மணம் புரிதல் அறமுறைக் கேற்றது என்பதற்குப் பல உதாரணங்கள் காட்டி, சகுந்தலையும் அரச குலத்தினளே யாதலின், அவள் காந்தர்வ முறையில் மணம் புரிவதை அறவொழுக்கம் முழுவதுமுணர்ந்த கண்ணுவரும் விரும்புவாரென்று அவள் மன மிசையுமாறு கூறி, மாலினி யாற்றங்கரையி லுள்ள அவ் வழகிய மலர்ப் பந்தரின் கீழ் இனிய தென்றற் காற்று வீசிய நடுப்பகல்

நேரத்திலே, சகுந்தலையைக் காந்தர்வ மணம் புரிந்தான். அவ்வாறு மணம் புரிந்தமைக் கறி குறியாகத் தன் பெயர் எழுதப்பட்ட அரச மோதிரத்தைச் சகுந்தலையின் விரலி லணி வித்தான்.

அப்பொழுது, கண்ணுவர் ஆசிரமத்தி லில்லாமையால், துஷ்யந்தன் சகுந்தலையைத் தன்னுடன் அழைத்துச் செல்ல முடியவில்லை. ஆகவே, துஷ்யந்தன் சகுந்தலையை நோக்கி, "சகுந்தலா, இந்தக் கணையாழியைப் பார்; இதில் என் பெயர் எழுதப்பட்டிருக்கிறது. இதிலுள்ள எழுத்துக்களைத் தினம் ஒவ்வோ ரெழுத்தாக எண்ணு. இவ்வாறு நீ எண்ணி முடிப்பதற்குள், நான் இவ்விடம் வந்து உன்னை அழைத்துச் செல்வேன்" என்று கூறினான். அப்பொழுது சகுந்தலை மகிழ்ச்சியுடன் காணப் பட்டாள்.

தன் மகள் வெப்பு நோயுற்றிருப்பதை யறிந்து, அதனைத் தீர்ப்பதற்காக, வேள்வி மாணுக்கன் தந்த இனிய நீருடன், ஆசிரமத் தாயாராகிய கௌதமி, அச்சமயத்து அவ் விடம் நோக்கி வந்தார். அவர் வரும் அரவங் கேட்ட சகுந்தலை, அதனை அரசனிடந் தெரி வித்தாள். அரசன் அவ்விடத்தை விட்டகன்று, ஒருபுறத்தே மறைந்து நின்றான். கௌதமி வேள்விப் புனல் நிரம்பிய பாத்திரத்தை எடுத்

துக்கொண்டு பிரியம்வதை, அனசூயை என் போருடன் சகுந்தலையின் அண்மையிற் சென்று, "குழந்தாய், உன் வருத்தந் தணிந்ததா? இதோ, இந்த நீரைத் தருப்பைப் புல்லினால் உன் உடம்பிலே தெளிக்கிறேன்; இதனால், உன் உடல் நலம் அடையும்" என்று கூறி, வேள்விப் புனலைச் சகுந்தலைமீது தெளித்தார்.

மாலைப்பொழுது ஆயிற்று. ஆதலால் கௌதமி சகுந்தலையை ஆசிரமத்துக்கு அழைத்துச் சென்றார். சகுந்தலை அவ்விடத்தை விட்டுப் பிரிய மனம் வருந்தி, உரத்த குரலில் "கொடிப் பந்தரே, என் துன்பத்தைப் போக்கிய பந்தரே, இப்போது உன்னிடம் விடை பெற்றுக்கொள்கிறேன்" என்று கூறி, அவ்விடம் விட்டகன்றாள். சகுந்தலை கூறியவற்றின் பொருளைத் துஷ்யந்தன், உணர்ந்து கொண்டான்.

சகுந்தலை முதலியோர் சென்றபின் துஷ்யந்தன் அங்கே வந்து, பெருமூச்செறிந்து துக்கமடைந்தான். பின், ஆரணியத்திலே தன் கடமை முடிந்துவிட்டபடியாலும், தன் படையினர் நகருக்குச் சென்று பல நாள்கள் கடந்துவிட்டமையாலும், நகரில், அவனாற் செய்யப்படவேண்டிய கடமைகள் பல இருந்தமையாலும் துஷ்யந்தன் நகருக்குத் திரும்பிச் சென்றான்.

## 9. துருவாசமுனிவரிட்ட சாபம்

நாள்கள் சில கழிந்தன. சகுந்தலை காந்தர்வ முறைப்படி தனக்கிசைந்த மணாளனை மணந்துகொண்டமை பற்றிச் சகுந்தலையின் தோழியர் மகிழ்ச்சியுற்றனர். ஆயின், 'துஷ்யந்தன் வேள்விக் கடன்களை முடித்துக் கொண்டு தன் நகருக்குப் போய்விட்டமையால், தன் நகரிலே உவளகத்து மகளிரோடு கூடியிருக்கும்போது, இங்கு நடந்த காந்தர்வ மணத்தை நினைவுகூர்வானோ? என்ற எண்ணத்தால் அவர்கள் சிறிது கவலையுமுற்றனர்.

பிரியம்வதை அனசூயையை நோக்கி, "நம்பிக்கையாயிரு; அவரைப்போல உயர்ந்த ஒழுக்கமுடையோர், ஒருபொழுதும், அறநெறி தவறார். அப்பா கண்ணுவர், இந்தச் செய்தியைக் கேள்விப்பட்டால் நிச்சயம் மகிழ்ச்சி அடைவார். ஏனெனில், தம் மகளைத் தக்கவனொருவனுக்குக் கொடுக்க வேண்டுமென்பது அவரது முதன்மையான விருப்பம்; அவர் விருப்பத்தை, விதி தானாகவே நிறைவேற்றி வைத்தது. அது அவருக்கு எவ்வளவு மகிழ்ச்சியைக் கொடுக்கும்?" என்று கூறினாள்.

"சகுந்தலைக்கு இத்தகைய நன்மையைத் தந்த காவற் றெய்வத்துக்கு நாம் பூசை செய்வோமாக; அதற்கு வேண்டிய பூக்களைக்

கொய்வோம்'' என்று கூறிக்கொண்டு தோழிய ரிருவரும் பூப்பறிக்கச் சென்றனர். சகுந்தலை பன்னசாலையி னயலிலே, தன் காதலன்பாற் சென்ற மனத்தினளாய், துஷ்யந்தனை எண்ணி, அவன் வயப்பட்டு, அவனையே நினைந்து தன்வயமிழந்திருந்தாள். அச்சமயத் திலே துருவாசமுனிவர் அங்கே வந்தார்.

துருவாசமுனிவர் அத்திரிமுனிவரின் புதல் வர்; மிகவிரைவிற் கோபங்கொள்ளு மியல்பி னர். கொடுஞ் சாபமிடுவதிலும் முதன்மை யானவர்.

துருவாசர் கண்ணுவரின் ஆசிரமத்தை அடைந்தார். தன் காதலனையே நினைந்து தன் வயமிழந்திருந்த சகுந்தலை, அதனை யவதா னிக்கவில்லை. துருவாசர் கூறிய வார்த்தைகள் தோழியருக்குக் கேட்டன. விருந்தினர் யாரோ வந்திருப்பதை, அவர்கள் அறிந்தார்களாயி னும், சகுந்தலை ஆசிரமத்திலிருப்பதால் அவள் விருந்தினரை வரவேற்பாளென எண்ணி, தம் வேலையிலீடுபட்டனர். சில விஞடிகளுக்குள் "ஆ, விருந்தினரை வரவேற்காது பராமுக மாய் இருந்தவளே! முனிவனுகிய யான் இவ் விடம் வந்திருப்பதை அறியாமல், நீ யாரை நினைந்துகொண் டிருக்கிருயோ, அவன், நீ நினைப்பூட்டினுலும், கள் உண்டோன் முன் பேசியதை நினையாமைபோல, உன்னை நினையா

திருப்பாளுக" என்று துருவாச ரிட்ட கொடுஞ் சாபந் தோழியர் செவிப்பட்டது.

"ஐயையோ, இது என்ன? சகுந்தலே யாரோ முனிவருக்கு ஏதோ பிழை செய்து விட்டாள் போலும்! அதோ அவர் யார்? அவர் துருவாச ரல்லரோ!" என்று கூறிய தோழியர், எவராலுந் தடுக்கமுடியாத, கடு நடையுடன் துருவாசமுனிவர் திரும்பிச் சென்ற தைக் கண்டு நடுநடுங்கினர்.

துருவாச முனிவரிட்ட சாபத்தால், மனம் நைந்த தோழியருள் ஒருத்தியாகிய அன சூயை ஓடிச் சென்று, துருவாச முனிவரை வணங்கி, மறுபடியும் அவரை ஆசிரமத் துக்கு வருமாறு மன்ருடிளுள். அதனே அவர் பொருட்படுத்தாது, கோபாவேசராய் விரைந் தார். அனசூயை மேலுந் தொடர்ந்து சென்று, அவர் பாதங்களேப் பற்றிக்கொண்டு "முனி சிரேஷ்டரே, நும் புதல்வி அறியாமையால், ஏதோ பிழை செய்துவிட்டாள்; இந்த ஒரு பிழையை அவள் முதன் முதற் செய்த பிழை யெனக் கருதி, எம்பெருமானே பொறுத்தருள வேண்டும். தாங்களிட்ட சாபத்திற்கு விமோ சன மருளவேண்டும்" என்று, இரந்து வேண் டிக்கொண்டாள். இதற்கிடையிற் பிரியம்வதை துருவாசரை வரவேற்பதற்காக, ஆசிரமத்தை நோக்கி விரைந்து சென்ருள். விரைந்து சென்

றதனுற் கால்தடுக்கிக் கீழே வீழ்ந்தாள். கையிலிருந்த பூங்கூடையும் வீழ, பூக்களுஞ் சிதறின. அவள் அப்பூக்களை ஒன்று சேர்த்தாள்.

துருவாசமுனிவரிடத்துச் சென்ற அனசூயை திரும்பி வருவதைக் கண்ட, பிரியம்வதை "அனசூயா, என்ன நிகழ்ந்தது? முனிவர் எங்கே?" என்று வினவினுள்.

அனசூயை தான் முனிவரிடங் கூறியவற்றை அவளுக்குத் தெரிவித்து, அவர் தனது வேண்டுகோளுக்குச் செவிசாய்த்து "என் சொல் பிழையாது; ஆயினும், நினைவுகூர்வதற்கு அடையாளமாகத் துஷ்யந்தனுலளிக்கப்பட்ட ஓராணிகலத்தைக் கண்டதும், என் சாபம் விமோசனம் ஆகும்" என அவர் கூறிய சாப விமோசனத்தையுங் கூறினுள்.

துருவாசர் அங்கே வந்ததும், அதன் பிறகு நிகழ்ந்தனவுமாகிய சம்பவங்களொதனையுஞ் சகுந்தலை அறியாள். தோழியரிருவரும் மாத்திரமே யறிவர். முனிவர் கூறிய சாப விமோசனம் அவர்களுக்கு ஒருவாறு சாந்தி அளித்தது. ஏனெனில், 'துஷ்யந்தன் தன் நகருக்கு மீளுமுன், நினைவுகூர்வதற்கு அடையாளமாகத் தன் பெயர் பொறிக்கப்பட்ட கணையாழியைச் சகுந்தலையின் விரலிலே தானே அணிவித்துப் போனுன். அதனுதவியாற் சகுந்தலை சாப விமோசனம் பெறமுடியும்' என்று,

தோழியரின் மனம் எண்ணியமையே அவர்களது மனச் சாந்திக்குக் காரணமாயிருந்தது.

தோழிய ரிருவரும் பூக்களுடன் சென்று, காவற் றெய்வத்தை வழிபாடு செய்தனர். அவர்கள் ஆசிரமத்தை யடைந்தபோது, சகுந்தலை இடது கையில் முகத்தைப் புதைத்தவண்ணம் ஓவியத்தி லெழுதப்பட்ட உருவம்போல அசைவற்றுக் காணப்பட்டாள். தன் கணவனை நினைந்து, ஆழ்ந்த நினைவிற் றன்னையே மறந்திருந்த சகுந்தலை, விருந்தினரை மறந்திருந்தமை ஒரு புதுமை யன்று.

சகுந்தலையைக் கண்ட தோழிய ரிருவருந் துருவாசமுனிவர் பற்றிய சம்பவத்தைத் தாங்கள் யாருக்கும் வெளிப்படுத்துவதில்லையெனத் தீர்மானித்துக்கொண்டனர். ஏனெனில், இயற்கையிலேயே மிக மெல்லியளான சகுந்தலை, அதனை அறியின் வருந்துவாளன்றோ! ஆதலின், தோழியரிருவரும் சகுந்தலையை யடைந்து துருவாசரின் சாபம் பற்றிய விடயத்தைக் கூறுது, வேறு பல இனிய உரைகளைக் கூறி அளவளாவி யிருந்தனர்.

## 10. சகுந்தலை அத்தினபுரிக்குப் புறப்பட ஆயத்தமாதல்

தீர்த்த யாத்திரையினின்று திரும்பிவந்த கண்ணுவர், ஒருநாளிரவு தமது மாணுக்க ஞெருவனை அழைத்து, 'இரவு எத்தனை நாழிகைகள் கழிந்துவிட்டன' வென அறிந்து வருமாறு அனுப்பினர். மாணுக்கன் சென்று பார்த்தபொழுது, மருத்துப் பூண்டுகளுக்குத் தலைவனான சந்திரன், மேற்கு மலையில் மறைந் தான்; எதிர்ப்புறத்தில் வைகறை என்னும் தேர்ப்பாகனை முன்னனுப்பி, பொன்போன்ற சூரியன், தோன்ற ஆரம்பித்தான். இவ்வாறு, இரு சுடர்களுள் ஒன்று தோன்ற, மற்றொன்று மறைதல் பூமியிலுள்ளோர் வாழ்வில் இன்ப முந் துன்பமும் மாறிமாறி வருதலைப் போன் றிருந்தது. சந்திரன் மறைய, அதனு லழகிழந்த ஆம்பல், கணவரைப் பிரிந்து மனமும் உடலும் வருந்தும் மகளிரைப் போன்றிருந்தது. இவற்றை யவதானித்த மாணுக்கன் காலை வேள்வி செய்யுங்காலம் வந்துவிட்டதென, குருவிடங் கூறுமாறு சென்றான்.

அன்று வைகறையிலே துயிலுணர்ந்த அனசூயை, பல உறுதிமொழிகள் கூறிச்சென்ற அரசன், அதுகாறுந் திரும்பாததைக் குறித்து மனங் கவன்றாள். 'அவர் ஒரு கடிதம் கூட எழுதவில்லையே; துருவாச முனிவரின் சாபத்

தால், அரசர் சகுந்தலையை மறந்திருப்பாரோ! அங்ஙனமாயின், யாது செய்யத்தக்கது! சகுந்தலையின், நினைவை ஏற்படுத்துவதற்கு, அவர் தந்த கணையாழியை அவர்க்கு நாமனுப்பலாம். ஆனல், அதனை யார் செய்வது? தந்தை கண்ணுவருக்கு, சகுந்தலை காந்தர்வ மணம் புரிந்துள்ளாளென்பதையும், அதன் பயனாய் அவள் கருப்பமுற்றிருக்கின்றா ளென்பதையுங் கூறுதற்கு, என்மனம் விழைகின்றதெனினும், நா எழவில்லையே! அவர் அறியின் எல்லாம் நன்மையாய் முடியுமே! அவர் அறியாராயின் நாம் யாது செய்ய முடியும்?' எனப் பலவாறு சிந்தித்துக்கொண்டிருந்தாள்.

அனசூயை சிந்தனையிலாழ்ந்திருக்கையில் அங்கே பிரியம்வதை தோன்றி மகிழ்ச்சியோடு அனசூயையின் தோள்களைப் பற்றிக் கொண்டு "தோழி, இன்று சகுந்தலையை அவள் கணவனிட மனுப்பவேண்டிய கடன்கள் செய்யவேண்டும்; வா, சீக்கிரம் போகலாம்" என்று கூறினாள்.

அனசூயைக்கு இவ் வார்த்தைகள் அதிசயத்தையும் மகிழ்ச்சியையும் அளித்தன. அவள் உடனே "இது எப்படி நிகழ்ந்தது? விபரமாகச் சொல்" எனக் கேட்டாள்.

"நான் இன்று காலை, 'சகுந்தலை நன்றாயுறங்கினளா' என்பதை யறியச் சகுந்தலை

யிடஞ் சென்றேன். அப்பொழுது சகுந்தலை நாணத்தினுற் றலைகவிழ்ந்துகொண்டிருக்க, அப்பா கண்ணுவர், அவளைத் தழுவிக் கொண்டு, தகுதியுள்ள மாணவனுக்குக் கற்றுக்கொடுத்த கல்விபோல நீயும் எனக்குக் கவலை தராதவளானுய்; உன் காந்தர்வ விவாகத்தை அசரீரிமூலமறிந்தேன்; அஃது அரசர்களுக்கேற்றதே; இன்றே துறவிகளைத் துணையாகக் கூட்டி, உன் கணவனிடம் உன்னை அனுப்புகிறேன்' என்று கூறிக்கொண்டிருந்தார்'' எனக் கூறினுள்.

தீர்த்த யாத்திரை முடிந்து கண்ணுவர் ஆசிரமத்தை அடைந்தபோது, அசரீரியின் மூலம் சகுந்தலையின் காந்தர்வ மணத்தையும் அதனுலவள் கருவுற்றிருப்பதையும் அறிந்து கொண்டார்.

பிரியம்வதை கூறியவற்றைக் கேட்ட அனசூயை, மகிழ்ச்சியடைந்தா ளாயினும், சகுந்தலையைப் பிரியவேண்டுமே யென்பதனுற் சிறிது துக்கமுமடைந்தாள்.

அனசூயை பல நாள்களுக்கு வாடாமலிருக்கக்கூடிய ஒரு மகிழமாலையை, தென்னேலையால் முடையப்பட்ட ஒரு கூடையில் வைத்து, ஒரு மரக்கிளையிலே தொங்க விட்டிருந்தாள். அவள் அம் மாலையையு மெடுத்துக் கொண்டு கோரோசனை, தீர்த்தமண், அறுகம்

புல் முதலிய மங்கலப் பொருள்களைத் திரட்டி வரச் சென்ருள்.

ஆசிரமத் தாயாகிய கௌதமி, சகுந்தலையை அத்தினுபுரிக்குக் கூட்டிச் செல்லும் துறவியர்களை அழைக்குமாறு கூறிய சத்தம், பிரியம்வதைக்குக் கேட்டது. பிரியம்வதை, அதை அனசூயைக்குக் கூறிவிட்டு, விரைவாகச் சகுந்தலையிருக்குமிடஞ் சென்ருள். அங்கே சகுந்தலை சூரியோதயத்திலே ஸ்நானஞ் செய்விக்கப்பட்டு, ஆசிரமத் தாய்மார்களா லாசீர்வதிக்கப்பட்டு நின்ருள்.

தோழியரைக் கண்ட சகுந்தலை, மகிழ்ந்து "நல்ல நேரத்தில் வந்தீர்கள்; இங்கே வாருங்கள்" என வரவேற்ருள். தோழியர் சகுந்தலையை அலங்காரஞ் செய்யத் தொடங்கினர். ஆசிரமத்திற் கிடைக்கும் பொருள்களால் அவர்கள் சகுந்தலையை அலங்காரஞ் செய்தனர். அப்பொழுது விலையேறப்பெற்ற வெண் பட்டாடைகளையும் அணிகலன்களையும் செம் பஞ்சுக் குழம்பையுங் கொண்டு, சீடர்கள் சிலர் அங்கே வந்து, ஆசிரமத் தாயாராகிய கௌதமியிடம் அவற்றைக் கொடுத்தனர்.

ஆடை ஆபரணங்களைக் கண்டு அனைவரும் அதிசயமடைய, கௌதமித் தாயார் அச் சீடர்களை நோக்கி, "குழந்தைகளே, எங்

கிருந்து இவற்றைப் பெற்றீர்கள்'' என்று வினவினர்.

தந்தை கண்ணுவர், மரங்களினின்று, மலர் பறித்து வருமாறு எங்களுக்குக் கட்டளை யிட்டார். அப்பொழுது அங்கே ஒரு மரம், மங் கலக் கடன்களுக் கேற்ற வெண்மதி போன்ற பட்டாடைகளை ஈந்தது; மற்றொன்று இவ் வாபரணங்களைத் தந்தது. இன்னொன்று பாதங்களுக்கூட்டும் செம்பஞ்சுக் குழம்பை நல்கிற்று'' என விடையளித்தனர் சீடர்.

அனைவரு மிதனைக் கேட்டு மகிழ்ச்சி யடைந்து, ''சகுந்தலை தன் கணவன் மாளி கையி லடையவிருக்கு மரச செல்வத்தை அறி விக்கும் உற்பாதமிவை'' என்று கூறிப் புன் னகை புரிந்தனர். சகுந்தலை நாண மெய்தி நின்றாள். தோழியர் சகுந்தலையை, தாம் ஓவி யங்களிற் கண்ட சித்திரம் போலப் புனைந்து அணிசெய்தனர்.

## 11. கண்ணுவர் சகுந்தலையை வழி அனுப்புதல்

சகுந்தலையைத் தோழியர் ஆபரணங்களாலணிசெய்த பின்னர், பட்டாடைகளையும் அணிவித்தனர். சகுந்தலை அவ் வெண்பட்டாடைகளை யணியும்போது, கண்ணுவர் பேரின்பம் நிறைந்த கண்களால் அவளை அன்பொழுகப் பார்த்துக்கொண்டு அங்கே வந்தார். அவரைக் கண்ட சகுந்தலை நாணத்துடன் குனிந்து வணங்கினாள். வணங்கிய சகுந்தலையின் தலையிற் கண்ணுவர் கையை வைத்து, "குழந்தாய், யயாதி மன்னனால், சர்மிஷ்டை எவ்வாறு நன்கு மதிக்கப்பட்டாளோ, அவ்வாறே, நீயும் நின் கணவனால் மிகவும் நன்கு மதிக்கப்படுவாயாக! சர்மிஷ்டை புரு என்னும் பெறற்கரும் புதல்வனைப் பெற்றுச் சிறப்படைந்தவாறுபோல, நீயும் இவ்வுலகம் முழுவதையும் ஆளத்தக்க புதல்வனைப் பெறுவாயாக! என வாழ்த்துவதுபோல வரமீந்தார்.

யயாதி, சந்திர வமிசத்திற் றோன்றிய அரசன். சர்மிஷ்டை பிசாசர் வம்ச அரசனாகிய விருஷபர்வன் என்பவனின் புதல்வி. யயாதி மன்னன் முதலிற் சுக்கிராசாரியர் புதல்வியான தேவயானையை மணஞ் செய்தான். தேவயானைக்குத் தோழியாகச் சர்மிஷ்டை அனுப்பப்

பட்டாள். அவள் அழகிலும் அறிவிலுஞ் சிறந்தவள். இவற்ருற் கவரப்பட்ட யயாதி, சர்மிஷ்டையின்மேற் காதலுற்ருன். அவளு மவன்மேற் காதல்கொள்ள, இருவரும் தம் பெற்ருேரினனுமதி பெருது, சகுந்தலையும் துஷ் யந்தனும் மணங்கொண்டமைபோல, தாமா கவே மணஞ்செய்துகொண்டனர். அவர்களின் புதல்வன் புரு எனப்படுவான்; புரு பேரரசன். அப் புருவின் மரபிலேயே துஷ்யந்தன் தோன்றினன். இதனை உட்கொண்டே கண்ணுவர் சகுந்தலையை மேற்கூறியவாறு வாழ்த்தினர்.

கண்ணுவர் அங்கே கிடந்த வேள்வித் தீயை வலம்வருமாறு சகுந்தலைக்குக் கூறினர். சகுந்தலை, அப்போதுதான் வேட்கப்பட்ட வேள்வித் தீயை வலம்வந்து கண்ணுவரை வணங்கினள். கண்ணுவர், இருக்கு வேதத்தி லுள்ள ஒரு சுலோகத்தைக் கூறி, "பரிசுத்த மான விறகுக ளிட்டு, தருப்பைப்புல் பரப்பி, வேள்வி மேடையைச் சுற்றி அமைக்கப்பட்ட குழிகளி லாக்கப்பட்ட இப் புனிதமான தீ, உன்னைத் தூய்மை செய்வதாக!" என்று வாழ்த்தி "இப்பொழுதே புறப்படுக" என்று கூற, அவள் புறப்பட்டாள். கண்ணுவரின் மாணவர் களுள் ஒருவரான சார்ங்கரவன், சகுந்தலைக்கு வழிகாட்டிச் சென்ருன்.

எல்லோரும், அவளைத் தொடர்ந்துசெல்ல, "இலக்குமியை ஒத்தவளான சகுந்தலை செல் லும் வழிகளி னிடையிடையே தாமரைகள் நிறைந்த குளிர்ந்த வளம் பொருந்திய தடா கங்கள் விளங்குவனவாக; மிக்க வெப்பத் தைத் தருஞ் சூரியனாலுண்டாக்கப்படும் வெப் பத்தை, பெரிய இலைகளையுடைய மரங்கள் நீக்கி, நிழல் செய்வனவாக; பூக்களிலிருந்து கீழேவிழுந்த மகரந்தப் பொடிகள், அவள் பாதங்களுக்கு மென்மை தருவனவாக!, அவள் செல்லவேண்டிய தூரம் குறுகுவதாக!"

*மங்கையிவள் செலும்வழியில் நறுந்தருக்கள்
நிழல்செய்து மலிக;மற்றும்
பொங்குமணல், தாமரையின் பொலந்தாது
போற்பொலிக; புனிதவாவி
எங்குமலர்ந் திலங்கிடுக; மந்தமா
ருதம்வீச இனியதோகை
யுங்குயிலுந் துணையாக; அறுதொடர்க்கண்
ணுகரம்போ லுறுக தூரம்.

எனக் கண்ணுவர் மனமகிழ்ந்து வாழ்த்தினார்.

சகுந்தலை புறப்படுவதற்கு முன், அவ் வாசிரமத்தில் வதியும் தேவதைகளை வணங்கி விடை பெற்றாள். சகுந்தலை கணவனிடஞ் செல் வதில் மகிழ்ச்சியடைந்தா ளாயினும், ஆசிர

* ம. வே. மகாலிங்கசிவம் அவர்களாற் பாடப்பட்டது. பாயிரத்திலுள்ளவாறு இது திருத்தப்பட்டுள்ளது.

மத்தை விட்டுப் பிரிவதிலே துன்பமடைந்தாள். அத் துன்பத்தைப் போலவே ஆசிரமத்திலுள்ளோரும் அவளைப் பிரிவதில், மிகத் துன்புற்றனர். ஆசிரமவாசிகள் மாத்திரமா? சகுந்தலையைப் பிரிவதில், மான்கள் முதலிய விலங்குகள் கூடத் துன்புற்றன. தம் வாய் நிறையக் கௌவிய தருப்பைப் புல்லை வாயிலிருந்து நழுவவிட்டு, மான்கள் வருத்தமுற்றன. மயில்கள் தம் ஆடலைவிட்டுக் கலங்கின. பழுத்த இலைகளையும், மிதமிஞ்சிய நீரையும் உதிரவிட்ட மரங்கள், தங் கண்ணீரைச் சிந்தி அழுவனபோன்றிருந்தன.

சகுந்தலை தன்னுடன்பிறப்பைப் போலக் கருதி வளர்த்த 'வனசோதினி' என்னும் மல்லிகைக் கொடியிடத்து, முதலில் விடைபெறச் சென்றாள். அக்கொடி ஒரு தேமா மரத்தைத் தன் கொடிகளாற் றழுவிக்கொண்டிருந்தது. சகுந்தலை, அதன் கிட்டப்போய் "இன்றுமுதல் நான் உன்னைவிட்டுப் பிரிந்து நெடுந்தொலைவிற் போய் இருக்கவேண்டியவளா யிருக்கின்றேன். ஆயினும் என்னுயிரினுமினிய தோழியரிருவரும் உன்னை யன்பாய்ப் பாதுகாப்பர். அவர்களிடத்து நின்னை ஒப்படைக்கின்றேன். நீ வருந்தாதே" என்று கூறினாள்.

"அங்ஙனமாகில் எங்களை யார் கையில் ஒப்படைக்கிறாய்" என்று தோழியர் இருவரும்

கூறிக் கண்ணீர் சிந்தினர். அவர்கள் துயரைக் கண்ட கண்ணுவர், பல இதமான வார்த்தைகள் கூறி, அவர்களைத் தேற்றினர்.

கருக்கொண்டிருத்தலால், ஆசிரமத்தி னயலில் மெதுவாக உலாவி மேய்ந்துகொண்டிருந்த பெண்மானைக் கண்ட சகுந்தலை, கண்ணுவரை நோக்கி, "அப்பா, இம் மான், கன்றீன்றவுடன் அம் மகிழ்ச்சியான செய்தியை எனக்குத் தெரிவியுங்கள்" என்று கூறினுள். கண்ணுவர், அதனைக் கேட்டுப் புன்முறுவல் பூத்தார். அச் சமயத்துச் சகுந்தலையின் ஆடையை, யாரோ பிடித்து இழுப்பதுபோன்ற ஒருணர்ச்சி சகுந்தலைக்கு ஏற்பட்டது. அவள் திரும்பிப் பார்த்தாள். தன் கைநிரம்ப நெல்லையூட்டியும் அதன் வாயிலே தருப்பைப் புல்லின் முனை குத்தியமையா லேற்பட்ட புண்ணுக்கு இங்குதி நெய்யைத் தடவி, அப் புண்ணையாற்றியும் தன் புதல்வனைப்போல, அன்பு பாராட்டி வளர்த்த மான் கன்று, தன்னுடையைப் பற்றி யிழுப்பதைக் கண்டாள்.

"குழந்தாய், உன்னை விட்டுப் பிரியப் போகின்ற என்னை, ஏன் தொடருகின்றுய்? உன்னையீன்ற சிறிது நேரத்தால், உன் தாய் இறந்துவிட, நான் நன்கு வளர்த்தேனென்பது உண்மைதான். ஆயின், நான் உன்னைவிட்டுப் பிரியுங் காலம் வந்துவிட்டது! நானில்லாவிட்

டாலும், என் அப்பா, உன்னை இனிது காப் பார். ஆகையால் நீ திரும்பிப் போ'' என்று அழுகையுடன் கூறினள்.

"குழந்தாய், அழாதே; நீ யழுதலாற் கண்ணீர் இமைகளை மறைக்கின்றன. கணவ னிடம் செல்லும் நீ, அழலாகாது'' என்று கண்ணுவர் கூறிச் சகுந்தலையைத் தேற்றினர்.

தமக்கு இனியவர்களை வழி அனுப்புபவர் கள் நீர்க்கரைவரை சென்று வழியனுப்புவது முறை. சகுந்தலை, ஓர் ஏரிக்கரையண்டை வந்துவிட்டமையால், அதற்கு மேற் செல்லல் முறையன்று என்ற விதிக்கிணங்க, எல்லோரும் அங்கே தங்கினர்கள். அப்பொழுது, கண் ணுவர் சார்ங்கரவனை நோக்கி, "சார்ங்கரவா, நீ சகுந்தலையை அரசனெதிரிற் கொண்டுபோய் விட்டு 'நாம் தவச் செல்வமுடையோ மென் றும், அவரோ பெரிய அரச ரென்றும், அவ ருடைய குடி மிக மேம்பாடுடைய தென்றும், அவரிடத்துச் சகுந்தலை மிகுந்த அன்புபூண்டு ஒழுகுகின்ற ளென்பதை அவர் உணர்ந்து, அவர் மனைவியரோ டொப்ப இவளையும் நன்கு நடத்தி வரல் முறை' யென்றும் தெரிவி. அதற்குமேல் இவள் நல்வினைப்படி நடக்கட் டும்'' என்று கூறியபின் சகுந்தலையை நோக்கி, "குழந்தாய், என் மகளே, நீ உன் கணவ னில் லத்திற்குச் சென்றபின், நின் மூத்தோர்க்கு

ஏவல்செய்து ஒழுகு; நின் கணவனுக்குரிய மற்றைய மனைவியரோடு, அன்புபூண்டு வாழ். உன் கணவன் உன்னைக் கோபிப்பினும், நீ அவனுடன் கோபியாதே; இவையே மனைவியர்க்குரிய ஒழுக்கம். இதற்கு மாறாய் நடப்பவர் கொடியவர். இதனை மனதிற் கொள்'' என்று கற்பொழுக்கங் கூறி, ஆசீர்வதித்தார். அப்பொழுது சகுந்தலை கண்ணுவர் பாதத்தில் விழுந்து ''தங்களைப் பிரிந்து நான் எங்ஙனம் வாழ்வேன்'' என்று கூறியழுதாள்.

''மகளே, நீ ஒருத்தம புத்திரனைப் பெற்று மகிழும்போது என்னைப் பிரிந்த துன்பத்தை மறந்துவிடுவாய். நிகரற்ற வீரனான புதல்வனைப் பெற்று, அவனிடம் அரசியலை ஒப்படைத்தபின், நீ உன் கணவனுடன் இவ்வாரணியத்துக்கு வந்து, தவத்தை மேற்கொள்வாயாக'' என்று கண்ணுவர் கூறிச் சகுந்தலைக்கு விடையீந்தார்.

சகுந்தலை தன் தோழியருக்குக் கிட்டப் போய், அவர்களைத் தழுவி, கண்கலங்கி நின்றாள். அப்பொழுது தோழியருக்குத் துருவாச முனிவரின் சாபம் ஞாபகத்துக்குவர, அவர்கள் சகுந்தலையை நோக்கி, ''அன்பான தோழீ, ஒருபோது அரசன் உன்னை அறிந்துகொள்ளக் காலந் தாழ்த்தினால், அவரது பெயர் பொறிக்கப்பட்ட இக் கணையாழியின் மூலம் ஞாபகப்

படுத்து '' எனக் கூறி, அக் கணையாழியை அவள் விரலில் நன்கு அணிவித்தனர்.

சகுந்தலை தந்தையாரையும் தோழியரையும் மறுபடியுந்தழுவி, விடைபெற்றுக்கொண்டு சார்ங்கரவன், சாரத்துவ னென்னும் மாணவர்களிருவரும் முன்செல்ல, ஆசிரமத் தாயாரர்கிய கௌதமியுடன் வழிக்கொண்டாள்.

கண்ணுவரும், தோழியரும் சகுந்தலை தம் கட்பார்வைக்கு மறையும்வரை அங்கேயே நின்று பார்த்துக்கொண்டு நின்றனர். பின்னர் கண்ணுவர், பிரியம்வதையையும் அனசூயையையும் நோக்கி, ''வாருங்கள் போகலாம்'' என அழைத்துக்கொண்டு ஆசிரமத்துக்குத் திரும்பினர். சகுந்தலையைப் பிரிந்தமையின் கண்ணுவர் துன்பமுற்றுரேனும், தன்னிடத்து வைக்கப்பட்ட அடைக்கலப் பொருளை, திரும்பவும் உடையவனிடஞ் சேர்த்துவிட்டாற் போன்ற மனவமைதி பெற்றுர்.

## 12. சகுந்தலை துஷ்யந்தனைக் காணுதல்

துஷ்யந்தன், தன் அரண்மனையில் ஓரரச இருக்கையிற் றங்கியிருந்தான். அவன் பாங்கனை விதூஷகன், துஷ்யந்தனி னயலில் நின்றான். அப்பொழுது அரண்மனையி னயலிலுள்ள இசைக் கழகத்திலிருந்து, மிக இனிமை வாய்ந்த பாடலொலி கேட்டது. அதனைக் கேட்டு மகிழ்ந்த அரசன், அப்பாடலைப் பாடிய அமிசபதிகை என்னும் பெண்ணிடந் தன் மகிழ்ச்சியைத் தெரிவித்து வருமாறு, விதூஷகனை யனுப்பினான். விதூஷகன் செல்ல, அரசன் அப் பாடலைக் கேட்டமையால் தன் மனம் ஒருவாறு கலக்கமடைந்திருப்பதை யுணர்ந்தான். தன் அன்புக்குரியார் ஒருவரைப் பிரிந்தமைபோன்ற உணர்ச்சி, தன் வசம் ஏற்பட்டிருப்பதன் காரணமென்ன வென்பது அவனுக்குப் புலனாகவில்லை. அதனால், அவன் சிறிது துயரமடைந்தான்.

கண்ணுவ ராசிரமத்திலிருந்து வந்த சகுந்தலை முதலியோர், தம் வரவைத் துஷ்யந்தனுக்குத் தெரிவிக்குமாறு, வாயிற் காவலனிடங் கூறினர். வாயிற் காவலன் அதனைத் தெரிவிப்பதற்காக, அரசனிருப்பிடம் நோக்கிச் சென்றான். அப்பொழுதுதான், அரசன் அரச கருமங்களை முடித்து அத்தாணி மண்டபத்திலிருந்து வெளிப்பட்டுத் தன் னரண்மனையிற்

றங்கியிருந்தான். அதனால், அரசனை மேலுங் கடமையு ளாழ்த்தித் துன்புறுத்துவதை வாயிற் காவலன் விரும்பவில்லை. ஆயினு மென் செய்வது! 'குடிகளின் நன்மையைக் கருது மரசர்களுக்கு, ஓய்வு கிடையாது. சூரியன் தன் தேரிற் பூட்டிய குதிரைகளை, இடைவிடாது செலுத்திக்கொண்டே யிருக்கிறான். காற்று, இரவும் பகலும், எந்தநேரமு மியங்கிக்கொண்டே யிருக்கிறது. ஆதிசேடன், எப்பொழுதும் பூமாதேவியைச் சுமந்துகொண்டே யிருக்கிறான். மக்களைக் காக்கும் மன்னன் கடமையும் சூரியன், காற்று, ஆதிசேடன் என்பவரின் கடமைபோன்று, இடைவிடாது நிகழ்ந்துகொண்டே யிருக்கிறது' என்பதை உணர்ந்த வாயிற் காவலன், தன் கடமையைச் செய்ய எண்ணினான். அரசன் தங்கியிருக்குமிடத்தை யடைந்து, அரசனைக் கண்டான்.

வெப்பத்தாற் றாக்குண்ட அரசயானை, தன்னைச் சுற்றிலும் யானை மந்தைகளை மேய விட்டு, தான் தனியே குளிர்ந்த நிழலில் இளைப்பாறுதல் போல, துஷ்யந்தனுந் தன் குடிகளுடைய கடமைகளை யெல்லாம் முடித்துவிட்டு, இளைப்புற்ற மனத்தோடு ஓரிடத்திலாறியிருந்தான். வாயிற் காவலன் அரசனை யடைந்து "மன்னனுக்கு வெற்றி சிறப்பதாக! மன்னர்மன்ன, கண்ணுவர் ஆசிரமத்திலிருக்கும் முனிவர்கள் ஆசிரம மாத ரிருவருடன்,

இங்கே வந்திருக்கின்றனர். கண்ணுவரிட மிருந்து ஏதோ செய்தி கொண்டு வந்துள் ளார்களாம். தங்கள் கட்டளை என்ன?'' என்று கூறிப் பணிந்து நின்றான்.

அரசன் மிகவும் பணிந்த குரலில், "கண் ணுவரிடமிருந்து செய்தி கொண்டுவந்தார் களா? அங்ஙனமாயின், அவர்களை வேதங் களிற் கூறப்பட்ட முறைப்படி வரவேற்குமாறு நமது புரோகிதராகிய சோமநாதருக்குத் தெரிவி. நானு மவர்களைக் காண்பதற்கேற்ற இடத்துக்குச் செல்லுகிறேன்'' என்று வாயிற் காவலனுக்குக் கூறிவிட்டு, தான் வேள்வி செய்யுமிடத்தை யடைந்து வேள்விக் களத்தி னுயரமான தாழ்வாரத்தின் படியிலேறி நின்றான்.

'இம் முனிவர்கள் மாட்சிமை தங்கிய கண் ணுவ முனிவரால், ஏன் அனுப்பப்பட்டார்கள்? அவர்கள் தவத்துக்கு, ஏதுமிடையூ றேற்பட் டதோ? விலங்குகளால், எவர்க்கேனும் தீங்கு நேரிட்டதோ? மாதர்களும் கூட வருவா னேன்?' என்று, அரசன் தனக்குட் பலவாறு சிந்தித்து, யாதுந் துணியமாட்டாதவனாய்க் கலக்கமடைந்திருந்தான். அப்பொழுது கௌத மியும் சகுந்தலையும் முன்வர, முனிகுமாரர் களும், புரோகிதரும் பின்னால் வந்தனர். அவர் களை வாயிற் காவலன் முன் நடத்தி வேள்வி

மண்டபத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான். அப்பொழுது சகுந்தலையின் வலக்கண் துடித்தது. 'என்ன தீமை நிகழுமோ? எவ்வாறுகுமோ?' எனச் சகுந்தலை துக்கமுற்றுள். கௌதமி அவளைத் தேற்ற, சகுந்தலை தெய்வங்களை வணங்கிக்கொண்டு, அரசன் தங்கியிருந்த வேள்வி மண்டபத்தை அடைந்தாள்.

துஷ்யந்தனின் புரோகிதர், அவர்களை அரசனிடம் அழைத்துச் சென்று "இவர்கள் கண்ணுவரிடமிருந்து செய்தி கொண்டுவந்திருக்கிறுர்கள். அதனைத் தாங்கள் அன்பு கூர்ந்து கேட்டல் வேண்டும்' என்று துஷ்யந்தனுக்குக் கூற, அரசன் முனிகுமாரர்களையும், வதங்கிய இலைகளின் நடுவே ஓரிளந்தளிர் தோன்றுதல்போலக் கௌதமியின் பக்கத்தில் முக்காட்டுடன் காணப்படுஞ் சகுந்தலையையுங் கண்டு அவள் யாராயிருக்கலாமெனத் தன்னுட் சிந்தித்து, புரோகிதரை நோக்கி, "இவர்கள் கொண்டுவந்த செய்தியைக் கேட்பதற்கு, இதோ ஆயத்தமாய் இருக்கிறேன்" என்று தெரிவித்தான்.

சகுந்தலை துஷ்யந்தனை நோக்கித் தன் மார்பிற் கையை வைத்து 'யாதாகுமோ' என்னும் எண்ணத்தளாய், அரசனை நோக்குவதும், நிலத்தை நோக்குவதுமாய்க் கலக்கமடைந்த மனத்தளாய், நின்றுள்.

## 13. அரச சபையிற் சகுந்தலை

துறவிகள் கையை யுயரத் தூக்கித் துஷ்யந்தனை வாழ்த்தினர். அரசன், அவ் வாழ்த்துக்கு மகிழ்ந்து, அவர்களனைவருக்கும் வணக்கஞ் செலுத்தினன். பின்னர், அவர்களை நோக்கி ''முனிவர்களது தவங்களும், வேள்விகளும் யாதோ ரிடையூறுமின்றி, இனிது நடைபெற்றுவருகின்றனவா?'' என முனி குமாரர்களை வினவினன்.

''சூரியன் சுடர்வீசி ஒளி காலும்போது இருள் எவ்வாறு தோன்றும்? நல்லோரைப் பாதுகாப்பதற்குத் தாங்க ளிருக்கும்போது முனிவர்களது தவ வொழுக்கங்களுக்கும், வேள்விகளுக்கும் இடையூறு எவ்வாறுண்டாகும்?'' என முனி குமாரர்கள் விடை கூறினர். இம் மொழிகளால் அரசன் மிக மகிழ்ச்சியடைந்து, மாட்சிமை தங்கிய கண்ணுவர் இனிது வாழ்கின்றனரா?'' என அவர்களை வினவினன்.

''வேதமோதும் முனிவர்களுக்கு, எந்நாளும் நலக்குறை வேற்படுவதில்லை. அவர், உமக்கு நலஞ் சிறக்குமாறு ஆசீர்வதித்தார். தம் மகளாகிய சகுந்தலையும், நீரும் ஒருவரி லொருவர் காதலுற்றுக் காந்தர்வ மணம் புரிந்துகொண்ட புனிதச் செயலை, அன்பினு

லேற்றுக்கொண்டிருக்கின்றார். நீரோ, யாவரா லும் நன்கு மதிக்கப்படுவதற் குரியவராய், எல்லாராலும் புகழப்படுதற்குரிய ஒழுக்க முடையீர். இங்கே நிற்கும் சகுந்தலையோ நல் லொழுக்கமே ஒருருவெடுத்து வந்தாற்போல விளங்குகின்றாள். பிரமதேவன், ஒத்தவியல்பு வாய்ந்த ஆடவரையும் மகளிரையும், ஒன்று கூட்டி வைத்துப் பெரும்புகழ் பெறுகிறான். இவ்வாறு உங்களை ஒன்றுகூட்டி வைத்த பிர மன் புகழ் பெருகுவதாக. உமது இல்லற வாழ்க்கையை இனிது நடத்துதற்குத் துணை யாகக் கருவுற்றிருக்கு மிவளை ஏற்றுக்கொள்வீ ராக! இதுவே, கண்ணுவர் நம்மிடஞ் சொல்லி அனுப்பிய செய்தி. நீர் நீடு வாழ்வீ ராக!'' என முனிவர்கள் தம் வரவின் வர லாற்றைக் கூறி நின்றனர்.

துருவாசமுனிவரின் சாபங் காரணமாகத் தான் சகுந்தலையை மணமுடித்தமையை மறந்துவிட்ட துஷ்யந்தன், முனி குமாரர் களின் வார்த்தைகளைக் கேட்ட மாத்திரத்தே துணுக்கமுற்றான். ''இது என்ன? இப் பெண், என் மனைவியா?'' என, அதிசயமுந் திகிலு முடையவனாய்க் கூறினான்.

துஷ்யந்தன் யாது கூறுவானோ வெனத் தனக்குட் பலவாறு சிந்தித்து நின்ற சகுந்தலை, அரசன் வார்த்தைகளைக் கேட்டதும் நெருப்பாற்

றகிக்கப்பட்டவள் போல வெதும்பினுள். அவளவ்வாறு துன்புறும்போது, துஷ்யந்தன் மேலுந் தொடர்ந்து, ''உங்கள் கற்பனை நன்ரு யிருக்கிறது ; இப்பெண்ணை இதற்கு முன் நான் கண்டதேயில்லை! அங்ஙனமாக, இப் பெண்ணை என் மனைவியென நீங்கள் கூறு வதை என்னுல் விளங்க முடியவில்லையே!'' என்று கூறினுன்.

துஷ்யந்தன் வார்த்தைகளைக் கேட்டு நின்ற கௌதமித் தாயார் ஆச்சரியமடைந்து, பின் சகுந்தலையை நோக்கி ''மகளே, உன் முக்காட்டை எடு. அப்பொழுது உன்னை அரச னுல் அடையாளங் கண்டுகொள்ளல் முடியும். வெட்கமுருமல் உன் முக்காட்டை எடு'' எனக் கூற, சகுந்தலை தன் முக்காட்டை எடுத்தாள். அப்பொழுது சகுந்தலையின் அழகைக் கண்டு, அரசன் வியந்தாணுயினும் அவளைத் தான் மணம் புரிந்தமை அவன் நினைவுக்கு வரவில்லை. அவன் பலவாறு சிந்திக்க, சார்ங்கரவன் அரசனை நோக்கி, ''உங்கள் சிந்தனையின் முடிவு என்ன?'' என வினுவினுன்.

''நான் எவ்வளவுதான் நினைத்துப்பார்த் தும் இப் பெண்ணை மணம் புரிந்ததாக எனக்கு நினைவு இல்லை. அவ்வாறிருக்கக் கருவுற் றிருக்கு மிப் பெண்ணை, நான் எங்ஙனம் ஏற்றுக் கொள்ள முடியும்?'' என்று கூறினுன்.

துஷ்யந்தனின் வார்த்தைகளைக் கேட்ட சகுந்தலை செய்வ தின்னதென் றறியாது திகைத்து நிற்க, சாரத்துவன், சகுந்தலையை நோக்கி, "அம்மா, நீயே இனி இதனை மெய்ப்பித்தல் வேண்டும்" என்று கூறினன்.

சகுந்தலை திகைத்து நின்றாளாயினும் தன் கற்பொழுக்க உயர்வை நிலைநிறுத்தவேண்டியதன் கடமையை உணர்ந்து "அரசே, துறவாச்சிரமத்திற் பலப்பல பேசி என்னைக் கடிமணம் புரிந்த தாங்கள், இப்பொழுது என்னைத் தள்ளிவிடுவது தருமமாகுமா?" என்று கூற, அரசன் தன் காதுகளைப் பொத்திக்கொண்டு "அம்மணி, கரைபுரண்டு பெருகிச் செல்லும் ஓராறானது தனது தெளிவான நீரைத் தானே கலங்கச்செய்து, கரைமேலுள்ள மரங்களையும் வேரோடு வீழ்த்தி விடுதல் போல, உனது பேச்சினல் உன்னையும் இழிவாக்கி, என் குலத்துக்கும் வடுவேற்படுத்த முயல்கின்றாய்!" என்று கூறினன்.

'இனி, என் செய்யலாம்' என்று எண்ணி நின்ற சகுந்தலைக்கு, தோழியர் கூறிய கணையாழியின் ஞாபகம் வர, "அரசே, நீர் மறந்துவிட்டால் உமது கணையாழி உமக்கு ஞாபகமூட்டட்டும். நீர் தந்த உமது பெயரெழுதப்பட்ட கணையாழியை இதோ காட்டுகிறேன்" என்று கூறித் தன் வலது கையைப் பார்த்து,

கணையாழியைக் காணுதவளாய் நடுநடுங்கி, "ஐயையோ, கணையாழி எங்கே போயிற்று" என்று கூறிக்கொண்டு கௌதமித் தாயாரை அழுகையுடன் நோக்கினுள்.

கணையாழியைக் காணுமையால் மனம் வருந்திய கௌதமித்தாயார் "அம்மா, நீ நீராடுகையில், அது சசிதீர்த்தத்தில் நழுவி விழுந்திருக்கவேண்டும்" எனக் கூறினள்.

துஷ்யந்தன் இதனைக் கேட்டுப் புன்னகை புரிந்து "பெண்கள் இயற்கையில், நேரத்திற் கேற்றவாறு பேசுவதில் வல்லவர்களே" எனக் கூறினுன்.

"விதியும் எனக்கு எதிராக இருக்கிறது போலும்! நான் எவ்வளவு அபாக்கியசாலி யாய் விட்டேன். ஆயினும், நான் இன்னு மொரு நிகழ்ச்சி சொல்லுகிறேன். அப்பொழு தாவது உமக்கு ஞாபகம் ஏற்படுமென நம்பு கிறேன்" என்று கூறிப் பின்வருமாறு சொல்லத் தொடங்கினுள்:

"அரசே, ஒருநாள் எங்கள் ஆசிரமத்தி லுள்ள புது மல்லிகைப் பந்தரின்கீழ், தாமரை இலையைப் பாத்திரம்போலக் கோலி, அதிலே தண்ணீர் கொண்டுவந்தீர்கள். அப்பொழுது, என் அன்புக்குரிய தீர்க்காபாங்க னென்னும் மான் கன்று, அங்கே வந்தது. தாங்கள் அத்

தண்ணீரை அந்த மான் கன்றுக்கு ஊட்ட முயன்றீர்கள். ஆனால், அது தங்களிடத்திற் பழகாததனால் உங்கள் அருகில் வர மறுத்தது. பின்னர், அந்நீரை நான் உங்களிடமிருந்து பெற்று அதற்கு ஊட்டினேன் அப்பொழுது தாங்கள் சிரித்து 'ஒவ்வொருவரும் தம்மினத்தாரில் நம்பிக்கை யுடையவர்களா யிருக்கின்றார்கள். நீயும் கானகவாசியாதலின், மான் உனக்குப் பயப்படவில்லை' என்று கூறினீர்களே!'' எனக் கூறினாள்.

துஷ்யந்தன் புன்னகைபுரிந்து, ''இவ்விதமான பொய்க் கதைகளைத் தந் தேன்மொழிகளாற் கூறுவதிற் பெண்கள் வல்லவர்கள். காமுகர்களே அவ் வார்த்தைகளால் மயங்குகின்றனர்'' என்றான். அப்பொழுது கௌதமி அரசனை நோக்கி ''சகுந்தலை புனிதமான துறவாசிரமத்தில் வளர்ந்தவளாகையால், கள்ளமே அறியாதவள்'' என்று கூறினார்.

''துறவொழுக்கத்தில் மேம்பட்ட அம்மையாரே, இத்தகைய விடயங்களிற் பிறர் கற்பிக்காமலே எவ்வாறு பொய் சொல்லுவதென்பதைப் பெண்கள் தாங்களாகவே இலகுவில் அறிய வல்லவர்கள். தாழ்ந்த விலங்குகளிலும் பெண் இனத்திற் காணப்படு மிவ் வியல்பு, மக்களிடத்தில் இன்னும் அதிகமாகக் காணப்படுவது புதுமையல்லவே! குயிற் பெடைகள், தங் குஞ்சுகள் ஆகாயத்திற் பறக்கும்வரையில்

வேறு பறவைகளைக்கொண்டு வளர்ப்பித்து வருவது நீங்கள் அறியாததா?'' என்று கூறினன்.

இவ் வார்த்தைகளைக் கேட்ட சகுந்தலை கோபத்துடன் ''கீழ்மகனே, உன் மன இயல் பிற் கிணங்கப் பிறரையுங் கருதுகின்ருய்! புற் களால் மூடப்பட்டுக் கீழே மறைந்திருக்குங் கிணற்றைப்போல, அறம்புரியும் அரசனென் னும் பெயர்பூண்டு, தீமை புரியும் இழிசெயல் உனக்கே உரியது; புரு வம்சத்திற் பிறந்தவ ரென்ற நம்பிக்கையால், நாவிலே தேனும், அகத்திலே நஞ்சும் அமைந்துள்ள நும்மால் நான் வேசியாக்கப்பட்டது தக்கதே'' என்று கூறித் தன் முந்தானையால் முகத்தை மூடிக் கொண்டு அழத்தொடங்கினுள்.

முனி புதல்வனுன சார்ங்கரவன், சகுந் தலையை நோக்கி, ''அம்மா, முன் நன்கு அறி யாதாரை எளிதில் நம்புவதால் ஏற்படும் பலன் இதுதான்; நாம் மேலும் பேசுவதிற் பயன் என்ன? குருவின் கட்டளைப்படி செய்து விட்டோம். நாம் திரும்பிப்போகிருேம்'' என்று கூறி அரசனை நோக்கி ''இதோ் நும் மனைவி; இவளை ஏற்றுக்கொள்ளினுங் கொள்ளுக. தள்ளிவிடினும் விடுக. தன் மனைவியை ஒராட வன் எங்ஙனம் நடத்தினும், அதன் பலன் அவனையே சாரும்!'' என்று கூறிக் கௌதமித்

தாயை நோக்கி "அம்மா, புறப்படுங்கள், போகலாம்" என்று கூறிப் புறப்பட்டனர்.

முனி புதல்வர்களுங் கௌதமியும் புறப் படுவதைக் கண்ட சகுந்தலை, தானும் அவர்க ளைப் பின்தொடர்ந்தாள். அப்பொழுது சார்ங் கரவன் சினத்துடன் திரும்பி, சகுந்தலையை நோக்கி "தூர்த்தே, நின் ஒழுக்கம் சரியான தென்று நீ அறிந்தாயானுல், உன் கணவன் வீட்டில் இருத்தலே தக்கது! நீ, நில்; நாங் கள் போகிறோம்" என்று கூறி அவளை விட்டுச் சென்றனர்.

"இவளை விட்டுச் செல்வது தருமமாகாது. பிறன்மனை ஒருத்தியை இவ்விடம் விட்டுச் செல்வது நியாயமாகுமா?" எனக் கூறிய துஷ்யந்தன், "இது என்ன, தருமசங்கடமா யிருக்கிறதே! இவள், ஒருபோது என் மனை வியா யிருத்தல் கூடுமோ? என் மனம் பேதுறு கின்றதே" என்று பலவாறு சிந்திக்கும்போது அரண்மனைப் புரோகிதர் அரசனை நோக்கி, "அரசே, பிள்ளைப்பேறு வரையில் இந்த அம்மையார், என் ஆசிரமத்தி லிருக்கட்டும். 'மன்னர் மன்னனுகும் ஒரு புதல்வனை, நீ முதன்முதற் பெறுவாய், என முனிவர்கள் முன்னொருமுறை உன்னை வாழ்த்தியுள்ளனர். இவள் பெறும் புதல்வனின் அரச அடையா ளங்களால், உனது ஐயந்தீர வழியுண்டாகும்"

எனக் கூறினர். அரசனும் அதற்கிணங்க, புரோகிதர், சகுந்தலையை அழைத்துச் சென்றார்.

"ஓ பெருமைதங்கிய பூமாதேவி! நீ வெடித்து என்னை ஏற்றுக்கொள்," என்று கூறிக்கொண்டு சகுந்தலை புரோகிதரின் பின்னே சென்றாள். அரசனுஞ் சகுந்தலையின் கூற்றுக்களை மனத்துள் நினைந்து துன்புற்றிருந்தான்.

புரோகிதரின் பின்சென்ற சகுந்தலை தன் கைகளைத் தூக்கி ஓலமிட்டாள். அப்பொழுது பெண் வடிவமுடைய ஓர் ஒளியுருத் தோன்றி, அவளை ஆகர்யத்தே தூக்கிச் சென்றது. இதனைக் கண்டு ஆச்சரியமுற்ற புரோகிதர், நடந்ததை அரசனுக்குத் தெரிவித்தார். இதனால், அரசன் மேலுங் கலக்கமடைந்து மனவருத்தத்துடன் தன் படுக்கையை அடைந்தான்.

## 14 துஷ்யந்தன் மோதிரம் பெற்றமை

சக்கிராவதார நதிக்கரையில் வசிக்கும் செம்படவனொருவன் வழக்கப்படி ஒருநாள் அந் நதியில் மீன்பிடிக்கச் சென்றான். அன்று அவனுடைய வலையில் ஒரு செந்நிற மீன் அகப்பட்டது. அம்மீனைக் கண்டு ஆச்சரிய மடைந்த செம்படவன், அதனை விற்க விரும் பாமல், தன் வீட்டுக்குக் கொண்டு சென்று அதனை அரிந்தான். என்ன அதிசயம்! அம் மீனின் வயிற்றுக்குள் ஒரு மணியாழி காணப் பட்டது. அம் மணியாழியே சகுந்தலையால் இழக்கப்பட்டதும், துஷ்யந்தனின் நாமம் எழுதப்பட்டதுமாகிய மோதிரம் ஆகும். சகுந் தலை நீராடும்போது சசிதீர்த்தத்தில் அதனை இழந்துவிட, அதனை அம் மீன் விழுங்கிற்று.

மோதிரத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்த செம்படவன், அதனை விற்கும் பொருட்டுக் கடை வீதியை அடைந்தான். அம் மோதிரத்திலே துஷ்யந்தனின் பெயர் எழுதப்பட்டிருப்பதைக் கல்வியறிவற்ற செம்படவனு லறிய முடிய வில்லை. அவன் அம் மோதிரத்தை விற்க முயற்சிக்கும்போது, அம் மோதிரம், அரச னுக்குச் சொந்தமானதென்பதை அறிந்தவர்க ளால், அவன் அரசனின் காவலாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டான்.

அரசனின் பெயர் எழுதப்பட்ட மோதிரம் அவனுக்கு எவ்வாறு கிடைத்ததெனக் காவலாளிகள் அவனைக் கேட்டனர். அப்பொழுது அவன் நடுக்கத்தோடு, "ஐயா, நான் அப்படிப் பட்ட செயல் செய்கிறவன் அல்லன்; என்னை மன்னித்து விடுங்கள்" என்று மன்றாடினான்.

"அது சரி; இம்மோதிரம் உனக்கு எப்படிக் கிடைத்தது? அவர் உனக்குப் பரிசாகத் தந்தாரா?" எனக் காவலாளிகளுள் ஒருவன் வினவ, அச் செம்படவன், "ஐயா, நான் சொல்லுகிறதைக் கேளுங்கள். நான் சக்கிராவதாரக் கரையிலிருக்கிற செம்படவன்" என்று சொல்லத் தொடங்க, இரண்டாங் காவலாளி, அவனைத் தடுத்து, "அடே, உன் சாதியை நாங்கள் கேட்கவில்லை; உனக்கு இம் மோதிரம் எப்படிக் கிடைத்தது? அதனைச் சொல்" எனக் கேட்டான்.

"அதைத்தான் ஆண்டவனே சொல்லுகிறேன். நான் மீன்பிடிக்கிற தூண்டில், வலை முதலியவற்றைக் கொண்டு மீன் பிடித்து என் குடும்பத்தைக் காப்பாற்றிவருகிறேன்" என்று, அவன் மறுபடியும் சொல்ல ஆரம்பிக்க, காவலாளி பொறுமையை இழந்து, "அடே, உன் தொழில் மிக விசேடமானதுதான்; அது கிடக்க நீ இம் மோதிரத்தை எங்கேயடா எடுத்தாய்; அதனைச் சொல்லடா" எனக் கூறிச் செம்படவனை வெருட்டினான்.

"ஆம் சாமி; அதனைத்தான் சொல்லு கிறேன். தலைமுறை தலைமுறையாகச் செய்து வருகிற தொழில், இழிவானாலும் அதை விட்டு விடக் கூடாது" என அவன் மீண்டும் தான் விட்ட இடத்திலிருந்து கதையை ஆரம்பிக்க, காவலாளி "அதுசரி; பிறகு நடந்தது என்ன? விரைவாகச் சொல்" என, விரைவுப்படுத்தி னான். செம்படவன் அதனைத் தொடர்ந்து "நான் ஒருநாள் வழமைபோல் மீன் பிடிக்கும் பொழுது ஒரு சிவப்புமீன் அகப்பட்டது. அதை அரிந்தேன். அதற்குள் இம் மோதிரங் கிடைத் தது. அதை விற்கக் கொண்டுவந்தேன். அப் பொழுது என்னை நீங்கள் பிடித்தீர்கள். என்னை நீங்கள் கொன்றாலுஞ் சரி; விட்டாலுஞ் சரி; இதுதான் மோதிரம் பெற்ற வரலாறு" என்று கூறினான்.

செம்படவனி லுடலிற் பச்சைமீன் நாற்ற மிருப்பதை உணர்ந்த காவலாளிகள், அவன் பேச்சை ஓரளவு நம்பி, அவனையு மழைத்துக் கொண்டு, அரண்மனைக்குச் சென்றனர். அரண் மனையை அடைந்து, செம்படவனை வாயிலிலே காவலாளி ஒருவனுடன் நிறுத்திவிட்டு, மற் றைய காவலாளி அம்மோதிரத்துடன் அரசனை அடைந்தான்.

காவலாளி மோதிரத்தை அரசனுக்குக் காட்டி, அது கிடைத்த வரலாற்றையுங் கூறி னான். மோதிரத்தைக் கண்ட அரசன், தனக்கு

மிக இனியரான யாரோ ஒருவருடைய ஞாபகம் ஏற்படுவதை அறிந்தான். அம் மோதிரத்தைக் கண்டவுடன், துருவாச முனிவரது சாபம் விமோசனமாயிற்று. அதனுற் சகுந்தலையின் நினைவு அவனுள்ளத்திற் சிறிது சிறிதாக வளர ஆரம்பித்தது. அவன் கண்களில் நீர் ததும்பிற்று; அவன் நிலை தடுமாறினுன். அதனைக் கண்ட காவலாளி கலங்கினுன்.

துஷ்யந்தன் சிறிது நிதானமடைந்து அம் மோதிரத்தைத் தன் கையில் வாங்கிக் கொண்டு, காவலாளியிடம் பெரும் பொருள் கொடுத்து, அதனைச் செம்படவனிடங் கொடுக்குமாறு கூறினுன்.

காவலாளி விரைவாக மீண்டு சென்று செம்படவனைக் கட்டவிழ்த்துவிட்டு, துஷ்யந்தன் தந்த பொருளைச் செம்படவனிடங் கொடுத்தான். அப்பொழுது மற்றக் காவலாளி மிகவும் ஆச்சரியமடைந்து "நிகழ்ந்ததென்ன?" என்று வினவ, மற்றக் காவலாளி நிகழ்ந்த வனைத்தையும் விபரமாகக் கூறினுன்.

"இவன் அதிட்டசாலிதான்; இவனைக் கொல்வதற்கு என் கை எவ்வளவு துடித்தது! தப்பிவிட்டான். அதுமட்டுமா? இவனுக்குப் பொன்னுமன்றே கிடைத்திருக்கிறது!" என்று கூறிக்கொண்டு மூவரும் அவ்விடத்தை விட்டகன்றனர்.

# 15. துஷ்யந்தன் உற்ற துயரம்

துஷ்யந்தன் கணையாழியைக் கண்டவுடன், துருவர்சரின் சாபம் விமோசனமானமையின், அவன் சகுந்தலையைத் தான் மணம் புரிந்தமையை நினைந்துகொண்டான். தன் மறதியினால் அவளை ஏற்றுக்கொள்ளாமல், இழிசொற் கூறித் தள்ளிவிட்டமையை நினைந்து மிகவும் மனம் வருந்தினான். சகுந்தலை தன்னிடம் கூறிய ஒவ்வொரு வார்த்தைகளையும் நினைக்க நினைக்க, அவன் மனம் பாகுபோல உருகிற்று. அவ்வார்த்தைகள் அவன் மனத்தை ஈட்டி போலத் தாக்கின. எனவே, துஷ்யந்தன்,

* "இன்பநுகர் பொருளெல்லாம் வெறுத்து விட்டான்,
இனியநூ லமைச்சரையும் கலவான் முன்போல்
கண்ணுறக்க மிரவெல்லாம் பெறமாட் டானுய்க்
கட்டில்மிசை யிங்குமங்கும் புரளு கின்றுன்
தன்பெரிய மணநல்லார் பேசும் போதும்
தண்மையினுற் சிலசொல்லி யுள்ளும் போதும்
பெண்ணரசி சகுந்தலையைப் பிழைத்துச் சொல்லி
பெரிதுவரும் நாணத்தாற் கலங்கு கின்றுன்."

— சாகுந்தலம்

ஆகி, தன் செயலிழந்து அறங்கூறு மவையத்திற்குஞ் செல்லாது, தன் கடமைகளையும் மறந்திருந்தான்.

---

* மறைமலையடிகளா லியற்றப்பட்டது.

இளவேனிற் பருவம் வந்தது. வேனிற் காலத்துக் கொண்டாடப்படும் விழாவைத் தன் மனத்துயர் காரணமாகக் கொண்டாட வேண்டாமென்று மன்னன் தடைசெய்திருந்தான். மான்பிணைபோன்ற விழிகளையுடைய சகுந்தலையின் தோற்றம், மன்னன் நெஞ்சம் முழுவதையும் பற்றிக்கொண்டது. அவன் தனது மனத்துயரைச் சிறிது தணிப்பதற்காக அரண்மனையி னயலிலுள்ள ஓரிள மரக்காவினை அடைந்தான். அரசனின் நண்பனை விதூஷகனும் அச்சோலையை அடைந்தான்.

துஷ்யந்தன், விதூஷகனை நோக்கி, "நண்பா, நான் இப்போது சகுந்தலையைப் பற்றிய நிகழ்ச்சிகளை யெல்லாம் நினைந்துகொண்டேன். முன்னர், உனக்கும் அவற்றைச் சொன்னேனே. நான் அவளை விலக்கிவிட்டபோது, நீ என் பக்கத்தி லில்லையாயினும் அதற்கு முன்னராவது அதனைச் சொல்லவில்லையே! என்னைப்போலவே நீயும் மறந்துவிட்டனையா?" என்று வினவினான்.

"நான் மறக்கவில்லை; ஆயினும் நீர், 'இஃது உண்மையன்று; வெறும் பகடிப்பேச்சு'; என்று அன்று கூறினீரே! நானோ களிமண் மூளையுள்ளவனாதலால், நீர் சொல்லியதை உண்மையென்று நம்பிவிட்டேன். ஆனாலும்

ஊழ் எல்லாம் வல்லது! அஃதிருக்க, உங்கள் பெயரெழுதப்பட்ட மோதிரத்தின் வரலா றென்ன?'' என்று கேட்டான் விதூஷகன்.

''யான் கண்ணுவ ராசிரமத்தினின்று புறப் பட்டு வரும்போது, என் காதலி கண்களில் நீர் ததும்ப நின்று, 'எம்பெருமான், எப் பொழுது எனக்குச் செய்தி விடுப்பீர்கள்?' என வினவினள். அப்பொழுது நான் என் பெயர் செதுக்கப்பட்ட இக் கணையாழியை அவள் விரலிலிட்டு, ஒவ்வொரு நாளுக்கு ஒவ்வோர் எழுத்தாக இக் கணையாழியிலுள்ள எழுத்துக் களை எண்ணு. கடையெழுத்தை எண்ண வரும் நாளில், நின்னை என் அரண்மனைக்கு அழைத்துவரும் பொருட்டு, ஒரு தூதுவனை அனுப்புவேன் என, அவளுக்கு விடை கூறி னேன். ஆயின், நான் மறதியினால் அங்ஙனஞ் செய்யத் தவறிவிட்டேன். சசி தீர்த்தத்தில் நீராடும்போது இக் கணையாழி கழன்று விழுந்துவிட, இதனை மீன் ஒன்று விழுங்கி யிருத்தல் வேண்டும்!'' எனத் துஷ்யந்தன் விதூஷகனிடம் கணையாழியின் வரலாற்றைக் கூறினான். அப்பொழுது, துஷ்யந்தனால் வரை யப்பட்ட சகுந்தலையின் சித்திரத்தை, சதுரிகை என்பவள் அங்கே கொண்டுவந்தாள்.

துன்பத்தால் வருத்தமுற்ற துஷ்யந்தன் பொழுது போக்காகச் சகுந்தலையின் உரு

வத்தை எழுதியிருந்தான். நன்கு தழைத்துப் பருத்த மாமரத்தினருகே, மலர்கள் சூடப்பட்டுக் கட்டவிழ்க்கப்பட்ட கரிய கூந்தலோடும், வியர்வைத் துளிகளரும்பிய முகத்தோடும், சிறிது களைப்படைந்த தோற்றத்தோடும் சகுந்தலையின் உருவம் வரையப்பட்டிருந்தது. சகுந்தலை தன் அழகிய கையினுலே தன் முகத்தை மூடியபடி நின்ருள். ஒரு கரிய வண்டு, அவள் முகத்தின் மேல் வந்து விழுந் தோற்றங் காணப்பட்டது. சகுந்தலையைத் தான் முதன் முதற் கண்ட தோற்றம்போல, துஷ்யந்தன் அச் சித்திரத்தைத் தீட்டியிருந்தான். அச் சித்திரத்தைத் துஷ்யந்தன் பார்த்து, தன் முன்னே உண்மையாகச் சகுந்தலையே நிற்பதாக எண்ணி, அச் சித்திரத்துடன் பல பேசித் தன்னை மன்னிக்குமாறு வேண்டினுன்.

சகுந்தலையின் தாயாகிய மேனகையாலனுப்பப்பட்ட சானுமதி யென்னும் தெய்வப் பெண்ணெருத்தி துஷ்யந்தன் தங்கியிருந்த இளமரச் சோலைக்கு வந்து, யார் கண்களுக்கும் புலனுகாதவாறு மறைந்திருந்தாள். துஷ்யந்தன் சகுந்தலையின் பிரிவாற் றுயருறுவதையும், அதனுல் அத்தினுபுரியில் ஏற்பட்டிருக்கும் மாற்ற நிலையையும், சகுந்தலையின் சித்திரத்தைத் துஷ்யந்தன் பார்த்து மனம் வெம்புவதையும், சானுமதி கண்டு மனமகிழ்ந்

தாள். தன் தோழியாகிய சகுந்தலையிடஞ் சென்று, அச் சோலையிற் றான் கண்டவனைத்தை யுங் கூறினாள். சகுந்தலை இவற்றைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து, தன் தாயாராகிய மேனகை, தன்னை அத்தினாபுரியிலிருந்து தேவருலகுக்குக் கொண்டுவந்தபோது, இந்திரனின் அன்னையார், 'கடவுளர் நின்னை நின் கணவனுடன் சேர்ப்பிப்பார்' எனத் தனக்குக் கூறிய ஆறுதல்மொழியை அப்பொழுது நினைத்தாள். துஷ்யந்தன் சகுந்தலையின் பிரிவாலடையும் துன்பம்பற்றி, சானுமதி சகுந்தலைக்குக் கூறியபோது, சகுந்தலை 'தன் துன்பங்கள் நீங்கும் காலம் வருகின்றதோ' என எண்ணி மகிழ்ந்தாள்.

துஷ்யந்தன் மரச்சோலையிற் சகுந்தலையின் நினைவாற் துன்பமுற்றிருக்குஞ் சமயத்தில், அங்கே சேவகன் ஒருவன் ஒரு கடிதத்தைக்கொண்டுவந்து அரசனிடங்கொடுத்தான்.

தனமித்திர னென்னும் வணிகன், கடலிற் பிரயாணஞ் செய்யும்போது கப்பலுடைந்தமையாற் கடலிலேயே இறந்துவிட்டா னென்றும், அவனுக்குப் பிள்ளைக ளின்மையான் அவனது பொருள்முழுவதும் அரசாங்கத்தைச் சேரவேண்டுமென்றும் அக் கடிதத்தி லெழுதப் பட்டிருந்தது. அக் கடிதம் துஷ்யந்தனின் முதலமைச்சரால் எழுதப்பட்டது.

கடிதத்தை அரசன் படித்தவுடன், பிள்ளை இல்லாதிருத்தல் மிகவும் பரிதபிக்கத்தக்க தென்னு முணர்ச்சி அவனுக்குளதாக, தனக்கும் புதல்வனின்மையும், கருப்பவதியாய்த் தன்னையடைந்த தன் காதலி சகுந்தலை தன்னாலே துறக்கப்பட்டமையும், சகுந்தலை தன்னைப் பிரியும்போது நீர் நிரம்பிய கண்களாற் றன்னை நோக்கிய பரிதாபப் பார்வையும், அவன் மனக்கண்முன் தோன்றின. அவன் அத் துன்பத்தைப் பொறுக்கமாட்டானாய் மேலும் வருந்துவானாயினான்.

## 16. துஷ்யந்தன் தேவருலகு சென்று மீளல்

இந்திரன் தேவர்களுக் கதிபன். தேவர்களும், அசுரர்களுங் குலப் பகைஞர்கள். பெரும்பாலும் அவர்களுக்கிடையே யுத்தம் நிகழ்வது இயல்பு. சில சமயங்களிற் பூவுலகத் தரசர்களான தசரதன், துஷ்யந்தன் முதலியோர் தேவர்களுக் குதவியாகத் தேவருலகு சென்று அசுரருடன் போர் புரிவதுமுண்டு. ஒருமுறை இந்திரனைக் காலநேமி என்னும் அசுரரின் வழிவந்த துர்ச்சயர் என்னும் அசுரர் எதிர்த்தார்கள். அவர்களை இந்திரனால் வெல்ல முடியவில்லை. துஷ்யந்தன் தேவ சேனைக்குத் தலைமை வகித்துப் போர்புரியின், அவ் வசுரரை வெல்ல முடியுமென இந்திரன் எண்ணினான். அதனால், துஷ்யந்தனை அழைத்துவருமாறு இந்திரன் தன் பாகனான மாலதி என்பவனைத் தன் தேருடன் துஷ்யந்தனிட மனுப்பினான்.

மாலதி, துஷ்யந்தன் தங்கியிருந்த சோலைக்குச் சென்று, அவனது துன்ப நிலையைக் கண்டு, அவன் மனத்துயரை மாற்றித் தான் வந்த காரணத்தைத் தெரிவித்தான்.

இந்திரன் தன்னைக் கௌரவித்துப் பெருமைப்படுத்தியதைக் குறித்து மகிழ்ந்த

துஷ்யந்தன், இந்திரன் கட்டளையை நிறை வேற்ற விரும்பி, தன் அரசாட்சியைப் பிசுனர் என்னும் மந்திரியிடம் ஒப்படைத்து மாலதி யுடன் இந்திரனின் தேரிலேறி விண்ணுலகு சென்றான்.

துஷ்யந்தன் தேவலோகத்தில் அசுரர்களை யழித்து வாகைமாலை சூடினான். அதனால் இந்திரன் மகிழ்ந்து, துஷ்யந்தனைக் கௌர வித்துப் பெருமதிப்புச் செய்தான். இந்திரன், தான் வீற்றிருக்கும் அரியணையிலே துஷ்யந் தனை இருக்கச்செய்து, தன் மார்பிற் பொருந் திய சந்தனந் தோய்த்த மலர்மாலையைத் துஷ் யந்தனின் கழுத்தி லணிவித்து மகிழ்ந்தான்.

தேவர்கள் துஷ்யந்தனது வெற்றித் திறங்களைப் புகழ்ந்து பாடினார்கள். அப்பாடல் களைத் தேவமாதர், கற்பகமரப் பலகைகளிலே தாமணியும் குங்குமத்தினால் எழுதினார்கள். இந் நிகழ்ச்சிகளினால் துஷ்யந்தன் மகிழ்ச்சி யடைந்தான். இவற்றாற்போலும், சகுந்தலை யின் பிரிவால் வாடியிருந்த அவனுள்ளம் சிறிது அமைதியுற்றது.

தேவர்களிடமும் இந்திரனிடமும் பிரியா விடை பெற்ற துஷ்யந்தன், மாலதியாற் செலுத்தப்பட்ட தேரின்மீதேறிப் பூவுலகத்தை நோக்கி வந்துகொண்டிருந்தான். சிறிது நேரத் தில், மூன்று பிரிவாகச் செல்லும் வான

கங்கையையுடையதும் நட்சத்திரங்களை இயக்குவதும் திருமால் மூன்றடியால் உலகை யளக்கும்போது இரண்டாவதடி தீண்டியமையால் எல்லாக் குற்றங்களும் நீங்கப்பெற்றதுமான பரிவகம் என்னும் வாயுமண்டலத்தை அத்தேர் அடைந்தது. பின்னும் சற்றுநேரத்தில் அத்தேர் மேகமண்டலத்தி லிறங்கிற்று.

தேர்ச்சில்லுகளின் விளிம்புகள், மழைத் துளிகளால் நனைந்திருந்தன. சாதகப் புட்கள் அம் மேகமண்டலத்தினூடே பறந்து சென்று கொண்டிருந்தன. தேரிற் பூட்டப்பட்ட குதிரைகள் மின்னலொளியால், மினுமினுவென விளங்கின. சூல்கொண்ட கருமேகங்கள், மெல்ல மெல்ல அசைந்துகொண்டிருந்தன். அப்பொழுது மாலதி துஷ்யந்தனை நோக்கி, "இன்னும் ஒரு நொடியில் உமது ஆளுகையின் கீழுள்ள நிலவுலகத்தை யடைவீர்" என்று கூற, துஷ்யந்தன் கீழே பார்த்துப் பூவுலகின் அழகை அனுபவித்தான். உயர்ந்த மலையானது, வரவர இழிந்து, கீழ் இறங்குவது போன்று, இவ்வுலகங் காட்சி யளித்தது. உயர்ந்த பெருமரங்களின் பருத்த கிளைகள் அவற்றின் செழித்த தழைகளால், இடையிடை மறைக்கப்படுவதும், இடையிடை விடுபடுவதுமாய்த் தோன்றின. குளிர்ந்த இனிய நீரையுடைய அகன்ற பெரிய ஆறுகள்,

முதலிற் கண்ணுக்கு நன்கு புலனுகாதிருந்து, பின்னர்ப் புலனுகி, வரவர அகன்று கண்ணுக் குப் புலனுயின. இவற்ருல், அழகு விளங்கு கின்ற — எழுச்சிபெற்ற — இந் நிலவுலகத்தினே யாரோ ஒருவன் எழச்செய்து, துஷ்யந்தனின் பக்கத்தில் அதனைச் சேர்ப்பதுபோன்ற தன்மை பெற்றிருந்தது அக்காட்சி.

இத்தகைய இனிய தோற்றத்தையுடைய நிலவுலகத்தைப் பார்த்து மகிழ்ந்தவாறே துஷ்யந்தன் ஏமகூட மலைச்சரரலை யடைந் தான்.

## 17. துஷ்யந்தன் சருவதமனனைக் காணல்

ஏமகூடமலை, இமயமலையின் சிகரம். அது பொன்மயமான உச்சியினை யுடையது. முகிலை முட்டுமாறு உயர்ந்தது; பொன்னை உருக்கி ஓடவிட்டாற்போன்று பொன்மயமாய்க் காட்சிதந்து, கீழ்த்திசை மேற்றிசை யனைத்தையும் மூடி நின்றது; கிழக்கிலும் மேற்கிலுமுள்ள இரு கடல்களையு மிணைத்து அகன்று கிடந்தது; சாயங்காலத்து மஞ்சள் வெயில், பொன்னொளி மிகுந்து திகழ்தலால் பொன்மலையென்னும் பெயரினை யுடையது. இத்தகைய சிறப்பு வாய்ந்த ஏமகூட மலையைத் துஷ்யந்தன் கண்டு "இம்மலை யாது?" என மாலதியை வினவ, மாலதி அம்மலையின் பெயரையும், அதன் சிறப்பையுங் கூறி, அம் மலையிலே தேவர்களையும் அசுரர்களையும் தோற்றுவித்த காசிபர் என்னும் முனிவர் தவமியற்றுதலையுந் தெரிவித்தான்.

காசிபரின் பெருமையை அறிந்த துஷ்யந்தன், அவரை வணங்க விரும்பினான். அதனைத் துஷ்யந்தன் மாலதிக்குத் தெரிவிக்க, மாலதி, மந்தார மரங்கள் நிறைந்த காசிபரின் தவப் பள்ளியினூடே தேரை நிறுத்தினான். அங்கே காசிபர் தவஞ்செய்துகொண்டிருந்தார்.

காசிபரின் உடம்பிலே ஒரு பாதி கறையான் புற்றினால் மூடப்பட்டிருந்தது. பாம்புச்

செட்டைகள் காசிபரின் மார்பில் ஒட்டிக்கொண்டிருந்தன. அவருடைய கழுத்துக்கள் கொடிகளாற் சுற்றப்பட்டிருந்தன. சடாமுடியிலிருந்து, பறவைக் கூடுகள் கழுத்துவரையிற் றெங்கிக் கொண்டிருந்தன. காசிபர் சூரியனுக்கு எதிர் முகமாய், பருத்த அடியுடைய மரம்போல அசையாது நின்று தவம் புரிந்துகொண்டிருந்தார்.

துஷ்யந்தன் வியப்புடன் காசிபரை நோக்கினன். 'இம் முனிவர்கள், கேட்டனவற்றை எல்லாம் கொடுக்கவல்ல கற்பக மரங்கள் நிறைந்த இடத்தின்கண் ணிருந்தும், அவைகளை யாதும் விரும்பிக் கேளாதவராய், இனிய காற்றைமாத்திரமே அருந்துகிறார்கள். தாமரை மலர்களின் பொன் நிறமான மகரந்தங்கள் விழுதலாற் பழுப்பு நிறமடைந்த இனிய நீரிலே நீராடுகிறார்கள். இவர்கள் மனமோ, அசையாத கருங்கற்போல இறைவனிலேயே பதிந்து கிடக்கின்றது. இவர்களது தவமோ மிக அருமையானது' என மனத்துள் நினைந்து அவரை வணங்குதற்கேற்ற செவ்வி நோக்கி நின்றான்.

மாலதி அவ்விடத்தை நீங்கி அப்பாற் சென்றான். துஷ்யந்தன் அங்கே காணப்பட்ட ஓர் அசோகமரத்தின் கீழ் நின்றான்.

துஷ்யந்தன் நின்ற இடத்துக்குச் சிறிது தூரத்துக்கப்பால், தன் தாயிடத்துப் பால்

குடித்துக்கொண்டிருந்த ஒரு சிங்கக் குட்டியை, தன்னுடன் விளையாட வருமாறு, அதன் பிடரி மயிரிற் பிடித்துச் சிறுவன் ஒருவன் இழுப்பதையும், முனிபத்தினியர் இருவர் அவனை அங்ஙனஞ் செய்யவிடாது தடுப்பதையும் துஷ்யந்தன் கண்டு அச் சிறுவனைக் கூர்ந்து நோக்கினான்.

சிங்கக்குட்டியை இழுத்துக்கொண்டு வந்த சிறுவன், அதன் வாயைத் திறந்து அக் குட்டியின் பற்களை எண்ணத் தொடங்கினான். அதனைக் கண்ட முனிபத்தினியர், ''ஏ, பையா; வர வர, உன் பட்டித்தனம் அதிகமாகிறது. உனக்குச் சருவதமனன் (எல்லாவற்றையும் அடக்கியாள்பவன்) என்னும் பெயர் பொருத்தமானதுதான்! இந்த விலங்கை வருத்தாதே. இக்குட்டியை நீ விடாதொழியின் இதன் தாய் உன்மேற் பாயும்'' எனக் கூறினர். அவனோ அதற்கஞ்சாதவனாய் ''அம்மா, நான் மிகவும் பயப்படுகிறேன்'' எனக் கூறிக் கேலிச் சிரிப்புச் சிரித்தான்.

சிறுவனை அச் செயலினின்றும் மாற்றி வேறொரு விளையாட்டி லீடுபடுத்துமாறு, ஒரு விளையாட்டுப் பொருளை எடுக்க முனிபத்தினியருள் ஒருவர் சென்றார். இவையனைத்தையும் பார்த்துநின்ற துஷ்யந்தனின் மனம் அச் சிறுவன்பால் இழுப்புண்டது. அச் சமயத்து

துஷ்யந்தனைக் கண்ட முனிபத்தினி துஷ்யந் தனை நோக்கி, "ஐயா, இச் சிங்கக் குட்டியை இவன் கைகளினின்றும் விடுவியுங்கள்" எனக் கேட்டுக்கொண்டார்.

அரசன் புன்சிரிப்புடன் அச் சிறுவனின் அருகிற் சென்று "நீ துறவியர் புதல்வனுயிருந் தும் துறவோ ரியல்புக்கு மாருக, ஏன் இப் பிராணிகளை வருத்துகிருய்?" எனக் கூறி, அவனுடலைத் தீண்டி, அக் குட்டியை விடுவித் தான். அப்பொழுது துஷ்யந்தனின் உடலில் ஒருவித இன்பம் உண்டாயிற்று.

துஷ்யந்தன் சருவதமனனுடன் சேர்ந்து காணப்படும்போது, இருவர் தோற்றமும் ஒத் திருப்பதைக்கண்டு, அம் முனிபத்தினி ஆச்சரிய மடைந்து, 'இஃதென்ன புதுமை! இவ் விரு வரும் ஒரே தோற்றமுடையராய்க் காணப்படு கிருர்களே!' என எண்ணி, "ஐயா, இவன் துறவியர் புதல்வன் அல்லன். இவன் புரு வம்சத்தைச் சேர்ந்த ஓரரசனின் புதல்வன் ஆவன்" எனக் கூறினர். இவ் வார்த்தைகள் துஷ்யந்தனின் மனத்தில், ஒரு நம்பிக்கையை உண்டாக்கி, அச் சிறுவன் தன் புதல்வனு யிருக்கவேண்டுமென்ற எண்ணம், அவன் மனத்தி லுதித்தது. ஆதலால், துஷ்யந்தன் முனிபத்தினியை நோக்கி "அம்மா, புரு வம் சத்தவர் அரசாட்சிபுரிந்து, தம் புதல்வருக்குப்

பட்டங் கட்டிய பின்பன்றே, இத்தகைய ஆசிரமங்களில் வதிவர். அங்ஙனமாக, புருவின் வம்சத்தவனான இச் சிறுவன் இங்கு வந்த தெங்ஙனம்? இவன் யாருடைய புதல்வன்?" என வினவினான்.

"இவனுடைய தந்தை ஒரு கொடூரமான மனிதன். தன் மனைவியாகிய இச் சிறுவனின் தாயை, ஏற்றுக்கொள்ளாது துரத்திய கொடியவன். தன் மனையாளை நீக்கிவிட்ட அக் கொடியவனின் பெயரை நாம் வாயால் உச்சரிக்கமாட்டோம்" என, அம் முனிபத்தினி விடை கூறினாள். இவ் வார்த்தைகள் துஷ்யந் தனுக்கு மேலும் நம்பிக்கையை அளித்தன. சருவதமனன் தன் புதல்வனே யெனவும், சகுந்தலையும் அவ்விடத்திலேயே இருக்க வேண்டுமெனவும் தீர்மானித்தான்.

## 18. துஷ்யந்தன் புதல்வனை அறிதல்

சருவதமனனுக்கான விளையாட்டுப்பொருளை எடுக்கச் சென்ற முனிபத்தினி, களி மண்ணுற் செய்யப்பட்ட ஒரு பறவையை எடுத்துக் கொண்டு அங்கே வந்து "சருவதமனு, இச் சகுந்தலாவண்ணியத்தைப் பார்" ( = இப் பறவையின் அழகைப் பார் ) எனக் கூறினுர்.

சருவதமனன் திரும்பிப் பார்த்து "என் அம்மா எங்கே?" என விஞவினுன். உடனே, முனிபத்தினியர் "நாம் சகுந்தலாவண்ணியம் என இப் பறவையின் அழகைக்கூற இவன் தன் தாய் சகுந்தலையோ என ஏமாறினுனே" எனக் கூறி நகைத்தனர்.

சருவதமனனின் தாய், சகுந்தலை என்பதை, முனிபத்தினியர்மூல மறிந்துகொண்ட துஷ்யந்தன், தன் துன்பங்களனைத்தும் நீங்குங் காலம் வந்துவிட்டதென மனமகிழ்ந்தான். ஆயினும். அவன் அதை நன்கு துணியமுடியாதவனுயிருந்தான். முனிபத்தினியருள் ஒருவர், சிறிது மனக்குழப்பத்தோடு சருவதமனனது மணிக்கட்டை நோக்கிக்கொண்டு "ஓ, இவனது மணிக்கட்டிற் கட்டப்பட்டிருந்த கரண்டகத்தைக் காணவில்லையே! அது எங்கே போயிற்று" என்று கூறிக்கொண்டு அங்குமிங்கும் பார்த்தார்.

சருவதமனன் சிங்கக்குட்டியைப் பிடித்து விளையாடும்போது அவனது கரண்டகம் நழுவிக் கீழே விழுந்துவிட்டது. அதனைக் கண்ட துஷ்யந்தன் "அம்மா, அதோ அக் கரண்டகம் இருக்கிறது; இவன் சிங்கக் குட்டியுடன் விளையாடும்பொழுது இது விழுந்து விட்டது" என்று கூறிக்கொண்டு அதனை எடுப்பதற்காகக் கீழே குனிந்தான்.

"அதனைத் தொடாதீர்; தொடாதீர்" என அம் முனிபத்தினி தடுத்தார். சருவதமனன் ஆசிரமத்திற் பிறந்த காலத்தில் மாரீசமுனிவ ரென்பவர், அபராசிதை என்னும் ஒரு பூண்டை அவன் கையில் ஒரு கரண்டகமாக அணிவித்தார். அது ஒரு வகைக் காப்பு. அக் காப்பைச் சருவதமனன் எப்பொழுதும் தன் கையி லணிந்திருந்தான். அது, அவனைப் பல அபாயங்களினின்றும் பாதுகாத்து வந்தது. அக் கரண்டகம் அவன் கையிலிருந்து கீழே விழுந்தால் அச் சிறுவனாவது அல்லது அவன் பெற்றோராவது எடுக்கலாம். அவர்களைத் தவிர வேறு யாராவது எடுத்தால், அது ஒரு பாம்பாக மாறி, அவரைத் தீண்டிவிடும். ஆனபடியாற்றான், முனிபத்தினி அக் கரண்டகத்தைத் தீண்டவேண்டாமெனத் துஷ்யந்தனைத் தடுத்தார். ஆயின், அதற்கிடையில் துஷ்யந்தன் அதனை எடுத்துவிட்டான். அது பாம்பாக மாறி, துஷ்யந்தனைத் தீண்டிவிடுமென நினைத்த

முனிபத்தினியர், அங்ஙனம் நிகழாததைக் கண்டு, தங்கள் கைகளைத் தம் மார்பின்மேல் வைத்துக்கொண்டு, ஒருவரை யொருவர் ஆச்சரியத்துடன் நோக்கினர்.

"ஏன் என்னை எடுக்கவேண்டாமெனத் தடுத்தீர்கள்?" எனத் துஷ்யந்தன் மலைத்து நிற்கும் அம் முனிபத்தினியரை வினவினன். முனிபத்தினியர் ஒருவர், அக் கரண்டகத்தின் இயல்பையும் வரலாற்றையுந் துஷ்யந்தனுக்குக் கூறினர். துஷ்யந்தன் தன் சந்தேகங்களனைத்தும் நீங்கப்பெற்று. அவன் தன் புதல்வனென்னும் உண்மையை யறிந்து "நானே உன் தந்தை" என்று கூறிக்கொண்டு சருவதமனனை அன்புடன் தழுவினன்.

"இல்லை, நீ என் தந்தை அல்லன். துஷ்யந்தனே என் தந்தை" என்று சிறுவன் கூறினன். இக் கூற்று துஷ்யந்தனுக்கு மகிழ்ச்சி தர, அவன் தன் புதல்வனைத் தழுவிக்கொண்டு நின்றான். இவ் வாச்சரியத்தைப் பார்த்த முனிபத்தினியருள் ஒருவர் சகுந்தலையிடம் விரைந்துசென்று, சகுந்தலைக்கு அந் நிகழ்ச்சிகளைக் கூறினர். அதனைக் கேள்வியுற்ற சகுந்தலை, 'சானுமதி முன் தனக்குத் தெரிவித்தவாறும் இந்திரனி னன்னையார் கூறியவாறும் துன்பங்கள் நீங்கும் காலம் வந்துவிட்டதோ' என எண்ணினள்.

# 19. எல்லாம் நன்மையாதல்

சகுந்தலை முனிபத்தினியர்களுடன் பின்னப் பட்ட சடையும் அழுக்கேறிய மரவுரி யுடையும் கடும் நோன்பினுல் வாடிய உடலு முடையவளாய், தன் புதல்வனை நோக்கி வந்துகொண்டிருந்தாள். அவளது பின்னிய சடை அவளது தூய ஒழுக்கத்தையும், நெடுநாள் அவள் மேற் கொண்டிருந்த நோன்பின் பெருமையையுங் காட்டின.

துஷ்யந்தன் சகுந்தலையைக்கண்டு அவளை அறிந்துகொண்டான். அவள் தோற்றத்தைக் கண்டு மனம் வருந்தினுன். கழிவிரக்கத்தினுல் வெளுத்துத் தோன்றும் அரசனைப் பார்த்து, சகுந்தலையால், முதலில் அவனை அறிந்து கொள்ள முடியவில்லை. ஆனுல் 'தன் புதல்வனின் கழுத்தைக் கட்டிக்கொண்டிருக்கும் அன்னியன், ஏன் இன்னும் கரண்டகத்தாற் ருக்கப் படவில்லை' யென ஆச்சரியமடைந்தாள்.

தாயைக்கண்ட சருவதமனன். தாயிடம் ஓடி, ''அம்மா அம்மா, இவரைப் பார்; யாரோ அன்னியர்; என் தந்தை எனக் கூறி 'ஓ, மகனே' என அணைக்கின்ருர்,'' என்று கூறினுன்.

துஷ்யந்தன் சகுந்தலையை நோக்கி '' என் அன்பே, என்னை மறந்துவிட்டாயா? சகுந்தலா!

நான் உன்னை மிக வருத்திவிட்டேன். கிரகணத்தால் விடப்பட்டவுடன், உரோகிணி என்னும் நட்சத்திரம் சந்திரனைச் சேர்ந்தவாறு போல, என் மறதி என்னும் இருள் நினைவினால், நின்னைத் துரத்தியபின்பு, நீ என் எதிரில் வந்துநிற்பது என் நல்வினையே!'' எனக் கூற, சகுந்தலை "இவரே என் கணவர், எம்பெருமானுக்கு வெற்றி சிறக்க,'' என்று கூறினளாயினும், கண்ணீர் மிகுதியால் அவளால் வேறு யாதும் கூற முடியாதிருந்தது.

துஷ்யந்தன் சகுந்தலையைக் கிட்டி, "அந்நேரத்தில், என் மனம் ஏதோ, அறியப்படாத காரணத்தால் மயங்கிநின்றது. குருடன் தன் தலையிற் சூடப்பட்ட மலர் மாலையையும், பாம்பென்றஞ்சி யெறிந்துவிடுதல்போல, நின்னையும் புறக்கணித்தேன். என்னை மன்னிப்பாய்'' எனக் கூறி நின்றனன்.

"நான் பூர்வத்திற் செய்த தீவினைப் பயனால், அங்ஙனம் நிகழ்ந்தது; என் காதலர் இரக்கமுடையர்'' என எண்ணியவளாய், அரசன் கையிற் கணையாழியைக் கண்டு "எம்பெருமானே இஃதன்றோ, அம்மோதிரம்'' எனக் கூறினள். "இம்மோதிரம் கிடைத்தமையினாலேயே, நான் உண்மையாக நின் நினைவு வரப்பெற்றேன்'' எனத் துஷ்யந்தன் தெரிவித்தான்.

ஆசிரமத்திலுள்ள முனிவர்களும், மற்றை யோரும் அங்கே கூடினர். மாலதியும் அங்கே வந்து, "அரசே, நீடுவாழ்க; மனையாளையும் புதல்வனையுங் கண்டதினால், நீர் மகிழ்ச்சியுறு வீராக!" என வாழ்த்தி, "இந்நிகழ்ச்சிகள் அனைத்தையும் இந்திரன் முதலிய தேவர்களு மறிந்தனர்; தெய்வத்தன்மைவாய்ந்த மாரீசர் தம்மைப் பார்க்கும்படி விடைதந்தார்: வாருங் கள்," என, தெரிவித்தான்.

சகுந்தலையையும் புதல்வனையும் னடத்திச் சென்று, துஷ்யந்தன் மாரீசனை வணங்கினான். மாரீசர் துஷ்யந்தனையும், சகுந் தலையையும் சருவதமனனையும் வாழ்த்தினார். துஷ்யந்தன் நடந்தன வனைத்தையுங் கூறி, "யானையைக் கண்டும், அது யானையன்றென எண்ணிப் புறக்கணித்து, பின் யானையின் அடிச்சுவடுகளைப்பார்த்து யானையென அறிந்த வாறுபோல், முதலிற் சகுந்தலையைப் புறக் கணித்து, பின் கணையாழியைக் கண்டே சகுந் தலையைப் பற்றிய எண்ணம் வந்த காரணம் யாதென அறியேன்; அதனைத் தெரிவிக்க வேண்டும்" என வினவி நின்றான்.

மாரீசர் துருவாசரது சாபவரலாற்றைக் கூறினார். அதனைக் கேட்ட துஷ்யந்தன், தான் அப் பழியினின்றும் விடுதலை பெற்றமைக்காக மகிழ்ந்தான். சகுந்தலையுந் தன் குற்றத்தினு

லேயே அவ்வாறு நிகழ்ந்ததென்றும் தம் கணவர் பேரன்பு மிரக்கமு முடையவரென்றும் அறிந்து மகிழ்ந்தாள்.

இம் மகிழ்ச்சியான வரலாற்றைக் கண்ணு வருக்குத் தெரிவிக்கவேண்டுமெனத் துஷ்யந் த[illegible] [illegible]நம்பினுன். ஆயின், ' தவ வலிமையால், [illegible]யவை ததையுங் கண்ணுவர் உணர்ந்து [illegible]ர்' என்பதை மாரீசர் மூலம் துஷ்யந் [illegible]ந்து மகிழ்ந்துகொண்டான். ஆயினும், [illegible]ர, மாணவன் ஒருவன் மூலம் இச் செய்தி யைக் கண்ணுவருக்கு உணர்த்தினுர்.

கண்ணுவர், முன்பு தன்னைச் சினவாமைக் கும், இதுவே காரணமென்பதைத் துஷ்யந் தன் சிந்தித்துத் தெளிந்துகொண்டான்.

மாரீசர் சருவதமனனை நோக்கி, " குழந் தாய், நீ வீராதி வீரனுய், நிகரற்ற போர்வீர னுய் இந் நிலவுலகத்தை நீண்டகாலம் ஆட்சி புரிவாயாக " எனவும், துஷ்யந்தனையுஞ் சகுந் தலையையும் நோக்கி, " இந்திரன், நுங் குடிக ளுக்கு ஏராளமான மழையைப் பெய்விக்கட் டும் ! நீவிரும் வேள்விகள் வேட்பித்துத் தேவர்களை மகிழ்விப்பீராக ! நற்செய்கைகள் பல புரிந்து பல்லூழிகாலம் வாழ்வீராக ! " எனவும் வாழ்த்தினுர். மூவரும் தேவேந்திர னது தேரி லேறிக்கொண்டு மாலதி தேரைச்

செலுத்த, அத்தினபுரியை அடைந்தனர். அங்கே நகர மாந்தர் மகிழ்ச்சியுடன் அவர்களை வரவேற்று உபசரித்தனர்.

துஷ்யந்தன் நீண்டகாலம் நல்லாட்சி புரிந்து தன் மகன் சருவதமனனுக்குப் பட்டங் கட்டி அரசனாக்கிய பின்பு, சகுந்தலையுடன் ஆரணியத்தை அடைந்து, தவம்புரிந்து சுவர்க்கமடைந்தான்.

சருவதமனன், பரதன் என்னும் பெயருடன், இந்தியா முழுவதையும் ஆட்சி புரிந்தான். இதனாலேயே இந்தியா, பரதகண்டம் என வழங்கப்படுகிறது.

வாழி நல்லறம் வாழி புரோகிதர்
வாழி நற்றமிழ் வண்புல வர்கடாம்
வாழி மன்னன் வளமுறு நற்குடி
வாழி வாழி வரன்முறை வாழியே.

சுபம்

# Sakuntalai Charithai

PANDIT V. NADARAJAN

Approved by the Director of Education. on the recommendation of the Educational Publications Advisory Board.

Re. 1-25

North-Ceylon Tamil Works Publishing House
CHUNNAKAM